Registered at the G. P. O. as a Newspaper ★ ★ விலை சதம் 15

# ஈழநாடு

தேசிய தினசரி National Tamil Daily

மலர்7 | விசுவாவசு வருடம் ஐப்பசி மாதம் 29. றஜப் 19. (14-11-65) ஞாயிற்றுக்கிழமை | இதழ்275

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14-டாம் வீதி கொழும்பு

RECEIVED
Library

நாவலர் சந்திப் படுகொலை

## சந்தேக நபர்கள் கோர்ட்டில் சரண் ரிமாண்டில் மூவர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் நாவலர் சந்திக்கருகில், சென்ற திங்கட்கிழமை மாலை சுப்பிரமணியம் தெய்வேந்திரம் என்ற கடைச்சிப்பந்தியொருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக யாழ்ப்பாணம் பொலிசாரால் தேடிவரப்பட்ட இரத்தினம், சுப்பிரமணியம், சண்முகம் ஆகிய மூவரும் வழக்கறிஞர் மூலமாக நேற்று யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வெளிப்பட்டார்கள்.

வழக்கறிஞர் திரு. விஸ்வநாதன் மூலமாக இவர்கள் வெளிப்பட்டார்கள்.

சென்ற திங்கட்கிழமை மாலை நாவலர் சந்திக்கருகிலுள்ள பாட்டரி சேவிஸ் கடைவாயிலில் நின்ற அந்தக் கடைச் சிப்பந்தி தெய்வேந்திரன் துப்பாக்கிச் சூட்டினால் ஸ்தலத்திலேயே மாண்டார்.

இவரதும் மரணம்சம்பந்தமாக யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நடத்திய விசாரணையில் சாட்சியமளித்தவர்கள் சினிஇரத்தினம், சுப்பிரமணியம், சண்முகம் ஆகியோர் ஒரு மோட்டார் காரில் வந்ததாகவும், இரத்தினம் என்பவர் சுட்டபோது தெய்வேந்திரம் சூடுபட்டு விழுந்ததாகவும் தெரிவித்தனர். கொலைக்கு உபயோகப்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் காரை பொலிஸார் சென்ற வெள்ளிக்கிழமை திருநெல்வேலியில் கைப்பற்றியுள்ளது தெரிந்ததே.

சரண்புகுந்துள்ள மூன்று சந்தேக நபர்களையும் இம்மாதம் 16ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டுள்ளார்.

சிக்கிம் எல்லையில்

## சீன-இந்திய துருப்புக்கள் மோதல்

புதுடில்லி, நவ. 13

சிக்கிம்-திபெத் எல்லையில் இன்று சீனத் துருப்புகள் இரு இந்திய காவல் நிலையங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக இந்திய செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

இன்று அதிகாலை ஏழுமணிக்கு சீனத்துருப்புகள் இந்திய காவல் நிலையங்கள் இரண்டின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் இந்திய துருப்புகள் திருப்பிச்சுட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. சண்டைதொடர்ந்து பி. ப. 2 மணிவரைகடுமையாக நடைபெற்றதாகவும் இதன் பயனாக இரண்டு சீனத் துருப்புகளும், ஒரு இந்தியத்துருப்பும் கொல்லப்பட்டதாகவும் அந்தச் செய்தி தெரிவிக்கிறது.

சட்டவிரோத

## ரொடீஷிய அரசாங்கத்தை அங்கீகரிக்க வேண்டாம்

### உலக நாடுகளுக்கு ஐ. நா. பாதுகாப்பு சபை வேண்டுகோள்

நியூயோர்க் நவ. 13

ஐக்கியநாட்டு பாதுகாப்பு சபை ஸ்மித்தின் சட்டவிரோத ரொடீஷிய அரசாங்கத்தை அங்கீகரிக்கவேண்டாம் என சகல அங்கத்துவ நாடுகளையும் கேட்டுக்கொண்டிருக்கிறது.

இதற்கிடையில் ஆபிரிக்க தேசிய வாதிகள் போட்டி ரொடீஷிய அரசாங்கம் ஒன்றை அமைத்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

முந்திய ஆபிரிக்க தேசியக் கட்சிகளின் தலைவர்கள் இப்போது சிறைவைக்கப்பட்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு சபையின்வாக்கெடுப்பில் 10 நாடுகள் தீர்மானத்தை ஆதரித்தன. பிரான்ஸ் வாக்களிக்கவில்லை.

தாங்கள் வாக்களிக்காத போதிலும் ரொடீஷியா பிரிட்டனின் உள்நாட்டு விஷயமாதலால் தான் பிரான்ஸ் வாக்களிக்கவில்லை என்றும் அந்நாட்டுப் பிரதிநிதி கூறினர்.

வீட்டுக்கிரியை

யாழ்ப்பாணம், தாவடி பிரபல சுருட்டு வியாபாரி எம். எஸ். கந்தையா அவர்களின் வீட்டுக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை அதாவது 14-11-65 நடைபெற இருப்பதால் அவ்வமையம் சுற்றத்தாரும், உறவினரும் சமூகம் தருமாறு வேண்டுகிறோம்.

அன்னாரின் மறைவு குறித்து அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் சமூகம் அளித்தவர்களுக்கும் எமது நன்றி.

இங்ஙனம்
எம். எஸ். கந்தையா குடும்பம்.

தாவடி,
கொக்குவில்.

1253

நேரு ஞாபகார்த்தம்

## பிரிட்டன் 50,000 பவுன் நன்கொடை

லண்டன், நவ. 13

பிரிட்டனில் நேருஞாபகார்த்த டிரஸ்டுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் 50,000 பவுண் அன்பளிப்பு செய்திருக்கிறது. பிரிட்டனின் நண்படும், மதசார்பற்ற ஜனநாயக இந்தியாவின் சிற்பியுமான ஸ்ரீ நேருவின் ஞாபகார்த்த டிரஸ்டுக்கு இதனை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைவதாகவும் பிரதமர் திரு. வில்சன் தெரிவித்தார்.



தராதரம் பெற்ற
கண் பரிசோதகர்
அனஸ்கோ,
12, மெயின் வீதி, யாழ்ப்பாணம்
(நூதனசாலைக்கு முன்பாக)

யாழ்ப்பாண

## அரசாங்க ஊழியர் இடமாற்றம் ரத்து

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்திலிருந்து அண்மையில் இடமாற்றம் செய்யப்படவிருந்த 10 அரசாங்க சேவை ஊழியர்களின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

யாழ்ப்பாணம் கச்சேரியில் கடமையாற்றிவரும் மேற்படி ஊழியர்கள் யாழ்ப்பாணத்தில் மூன்று வருட சேவையே செய்திருந்தார்களென்றும் இவர்கள் குறிப்பிட்ட 4வருடசேவைபூர்த்தியாகுமுன் மாற்றம் செய்யப்பட்டது திறைசேரியின் சுற்றறிக்கைக்கு முரணானது என அரசாங்க லிகிதர் சேவை சங்கத்தின் யாழ். கிளை திறைசேரியின் நிரந்தரக் காரியதரிசிக்கு எடுத்துக் கூறியதன் பேரிலேயே இந்த இடமாற்றம் ரத்துசெய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## உகண்டா பிரதமர் கருத்து

கம்பாலா, நவ. 13

ரொடீஷிய வெள்ளை ஆட்சியாளர் ஒருதலைப்பட்சமான சுதந்திரப் பிரகடனம் செய்துள்ளதால் எழுந்துள்ள நெருக்கடி நிலைபற்றி ஆராய்வதற்காக உகண்டா பிரதமர் டாக்டர் மில்டன் ஒபோட் தாம் கென்யா, தன்சானியா, சாம்பியா ஆகிய நாடுகளின் தலைவர்களுடன் கூடி ஆலோசனை நடத்தப்போவதாகத் தெரிவித்துள்ளார்.

திரு. அயன் ஸ்மித்தின் ஒருதலைப்பட்சமான சுதந்திரப்பிரகடனம் ரொடீஷியாவில் எவ்விதமாற்றத்தையும் செய்துவிடவில்லையென்றும் அது இப்போதும் ஒரு பிரிட்டிஷ் காலனியாகவே இருக்கிறதென்றும் அவர் எடுத்துக்கூறியுள்ளார்.

## ரொடீஷியா

நியுயோர்க், நவ. 13

ரொடீஷியாநிலைமைபற்றி ஆராயவென ஐ. நா. பாதுகாப்பு சபை இலங்கைநேரப்படி இன்று நள்ளிரவு மீண்டும் கூடியது. பிரிட்டிஷ் வெளிவிவகாரமந்திரி திரு. [illegible] விவாதத்தைத் [illegible]க்கிவைத்தார்.

[illegible]டையில் ரொடீஷியாவின் ஒரு தலைப்பட்சமான சுதந்திரத்தை ஆட்சேபித்து பல ஆபிரிக்க நாடுகளில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதாக செய்திகள் கூறுகின்றன. கானா, எதியோப்பியா, சியாரலியோன், ஜாமைக்கா ஆகியவை உட்பட இன்னும் பல நாடுகளில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

## உலக தமிழ்ஆராய்ச்சிமகாநாட்டில் 40 நாடுகள் கலந்து கொள்ளும்

### தனிநாயக அடிகளார் அறிவிப்பு

கொழும்பு, சனி

"நமது கலாசாரம் வெளிநாடுகளில் பரந்துகிடக்கிறது. நமதுமொழியைப்பற்றி, பண்பாட்டைப் பற்றி அறிந்தவர்கள் உலகெல்லாம் இருக்கிறார்கள். தென்கிழக்காசிய நாடுகளான பாலித்தீவிலே, பர்மாவிலே, ஜாவா, சுமத்திராவிலே இன்றும் தமிழ்ப்பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், இறை வழிபாட்டுமுறைகள், பெயர்கள் எல்லாம் நிறைய இருக்கின்றன. இன்னும் பிரான்ஸ், ஜேர்மனி. செக்கோஸ்லவாகியா, பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளில் நமது மொழியையும், பண்பாட்டையும் பற்றி ஆராய்ந்தவர்கள் இருக்கிறார்கள். இப்படி உலகம் முழுவதிலுமுள்ள சுமார் 40 நாடுகளில் நமது பெருமையை அறிந்த இருநூற்றுக்குமதிகமான அறிஞர்கள் கோலாலம்பூரில் நடைபெறவிருக்கும் உலகத்தமிழ் ஆராய்ச்சிமகாநாட்டில்கலந்துகொள்ளவிருக்கிறார்கள். இந்த மகாநாட்டை செக்கோஸ்லவாகியாவில் ஏன் நடத்தக்கூடாதென்று அந்த நாட்டறிஞர் ஒருவர் கேட்டுள்ளார்."

இவ்வாறு 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கோலாலம்பூரில் நடைபெறவிருக்கும் உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாடு பற்றியும் அதன் செயல்கள் பற்றியும் விளக்குகையில்மலாயாப் பல்கலைக்கழக, இந்தியத்துறைத் தலைவர் பேராசிரியர் தனிநாயக அடிகளார் கூறினர்.

நீதியரசர் பொ. ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அடிகளார் மேலும் கூறியதாவது:

உலகத்திலே தமிழ் பரவியதுபோல வேறெந்தமொழியும் பரந்திருக்கவில்லை. தென்னாபிரிக்காவுக்குச்சென்றால்தமிழர்களைக்காணலாம். இதே போலவே பர்மாவி

(10-ம் பக்கம் பார்க்க)




**இறுதி மூச்சு:** (வரலாற்று நாடகம்) எழுதியவர்: த. சண்முகசுந்தரம். வெளியிட்டோர்: வித்துவான் கணேசையர் தமிழ்ச் சங்கம், மாவிட்டபுரம். பக்கம் 72 விலை ரூபா 1-00.

யாழ்ப்பாணத்துக் கடைசி அரசன் போர்த்துக்கேயரிடம் தோல்வியுற்று யாழ்ப்பாண இராச்சியம் வீழ்ச்சியுற்றபின் நம்பிக்கையும் வலிமையும் இன்னமும் அற்றுப்போய்விடாத அதன் உயிர்த்துடிப்புள்ள கடைசி மூச்சை 72 பக்கங்களில் ஓர் அமைப்பான நாடகமாக சித்தரித்துத்தருகிறார் இந் நூலாசிரியர். கி. பி. சுமார் 1620-ம் ஆண்டு மட்டில் யாழ்ப்பாணத்திலுள்ள போர்த்துக்கேயர் கோட்டையிலும் வன்னிப்பகுதி நடுக்காட்டிலும் நிகழும் இக்கதையில் போர்த்துக்கேய தளபதிகளுடன், யாழ்ப்பாண அரசிற்கு உரிமையாளனான பரராசசேகரன் யாழ்ப்பாண அரசனின் மெய்ப்பாதுகாவலன் வரோதய சிங்கன், யாழ்ப்பாணத்தரசின் வேதியர் அந்தணர் அருணசலம், யாழ்ப்பாணத்து முதலி எதிர்நாயகம், பிரசித்தகாரன் வள்ளுவன் வைரவன், பரராசசேகரனின் மனைவி, அவள் தோழிப்பெண் என்போர் முக்கிய பாத்திரங்களாகத் தோன்றுகிறார்கள். மன்னனை இழந்து நின்ற மக்களை வசப்படுத்த இருபகுதியினரும் மேற்கொள்ளும் முயற்சிகளையும் திட்டங்களையும் மோதுதல்களையும் வெற்றி தோல்விகளையும் வைத்துக் கதைப் போக்கைப் பின்னிச் செல்லும் ஆசிரியர் அங்கங்கு தேசபக்தி உணர்ச்சியையும் ஊடே தெளித்து விட்டிருக்கிறார்.

''நாட்டைப்பிடித்தல் நற்கிறித்துவத்தைப் பரப்புதல் நயம்மிகு வாணிபத்தில் ஈடுபடுதல், ஆகிய முப்பெரும் அவாவினால் உந்தப்பட்ட போர்த்துக்கேயர் 1505-ம் ஆண்டில் இலங்கை வந்து சேர்ந்தனர். படிப்படியாக அவர்கள் இலங்கைக் கரையோரப் குதியைத் தமதாக்கினர். போர்த்துக்கேயரின் வருகைக்குப் பலத்த எதிர்ப்பு உருவாகியது. கோட்டையில் விதிய பண்டாரன், சீத்தாவாக்கையில் மாயாதுன்னை முதலாம் இராசசிங்கன், கண்டியில் முதலாம் விமலதர்ம சூரியன் ஆகியோர் காலத்திற்கு காலம் தோன்றினர் யாழ்ப்பாண இராச்சியத்திலும் இந்தவிதமான எதிர்ப்பிற்குக்குறைவில்லை. 1544-ம் ஆண்டிலே செகராசசேகரன் என்னும் சங்கிலி மன்னன் இந்த எதிர்ப்பை உலகறியச் செய்தான்—'' ஆசிரியரின் குறிப்புரையே இப்படித் தான் தொடங்குகிறது.

'...நான் பிறந்த அன்று மன்னாரில் ஆயிரமாயிரம் முத்துச் சிப்பிகளும் வலம்புரிச்சங்குகளும் அகப்பட்டனவாம்.' — பக்கம் 38.

'கீரிமலையில் குமாரத்தி பள்ளத்தில் என்பெற்றோர், உடன்பிறந்தோர் வாழ்கின்றனர். நான்நற்சுகமுடையேன் என்று என் தந்தைக்குத் தெரிவிப்பீர்' — பக்கம் 43.

இவை, நூலாசிரியருக்குள்ள சரித்திரகால ஈடுபாட்டைப் புலப்படுத்துவன.

—'காங்கேயன்'

**மாலா நீ என்னைமறந்துவிடு:** (சிறுகதைகள்) எழுதியவர்: சீ. சிவஞானசுந்தரம் கோட்டைக்காடு, ஏழாலை மேற்கு. பக்கம்44, விலைசதம் 65.

(9-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தேவை

பிணைப்பணம் செலுத்தக்கூடிய ஸ்ரோர் கீப்பர், கஷியர் தேவை. எழுத்து மூலம் 16-11-65 முன் விண்ணப்பியுங்கள். விளம்பர இல: 1369 'ஈழநாடு' மேற்பார்த்து, யாழ்ப்பாணம்.

1369

கொழும்பில் வேலைசெய்வதற்கு புல்டோசர்கள், லோடெர்கள், ட்ராக்ரர்கள் மெக்கானிக்குகள் தேவை. காசுப்பிணைதேவை. விண்ணப்பிக்கவும். ஜவ்வர்ஜி பிறதர்ஸ், சென்ற் யோசெப் கிருண்ட்பாஸ்.

ஒப்பந்த முறையில் கொழும்பில் வேலை செய்வதற்கு ட்ராக்ரர் சாரதிகள் விவசாய ட்ராக்டர்கள் மூலம் மண் ஏற்றுமதிசெய்வதற்கு தேவை. விண்ணப்பகாரர்கள் லொறிகளும் வாகனுதிகளும் செலுத்துதற்குரிய லைசென்ஸ் உடையவர்களாயும், காசுப்பிணை கட்டக் கூடியநிலையில் உள்ளவர்களாயும் இருத்தல்வேண்டும். விண்ணப்பிக்கவும்: ஜவ்வர்ஜி பிறதர்ஸ், 150, சென்ற் யோசெப்ஸ் வீதி, கிருண்ட்பாஸ்.

1363

ஒப்பந்த முறையில் கொழும்பில் வேலை செய்வதற்கு புல்டோசர் சாரதிகள் தேவை. விண்ணப்பதாரர்கள் காசுப்பிணைகட்ட வேண்டும். விண்ணப்பிக்கவும். ஜவ்வர்ஜி பிறதர்ஸ், 150, சென்ற் யோசெப்ஸ் வீதி, கிருண்ட்பாஸ்.

1361


### விற்பனைக்கு

கிளிநொச்சியில் இரண்டாம் வாய்க்காலில் பத்து ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. வேண்டுபவர் ஒரு மாதத்துக்குள் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். S, கனகசபாபதி பிறக்கிருசியார், மல்லாகம்.

1360

### வைத்தியம்


**தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி** முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

# அழகினுக்கு மெருகூட்டுங்கள்!

வழவழவென முகத்தில் படிந்திருக்கும் எண்ணெயை அகற்றி, சருமத்திற்கு பட்டுபோன்ற மிருதுவான யௌவன வனப்பை அளிப்பது பொன்ட்ஸ் வெனிஷிங் க்ரீம்

உங்கள் சருமத்திற்கு புதியதோர் பொலிவு கொடுங்கள. கச்சிதமான தோற்றமளிக்க விரும்பும் யுவதிகள் யாவருக்கும் கிட்டும் இப்பொலிவு எண்ணெய் பசையற்ற மென்மையான பொன்ட்ஸ வெனிஷிங் க்ரீம் சருமத்தை மிருதுவாக்கி, பாதுகாக்கிறது. சருமத்தில் காணப்படும் மாசுமருக்களையும், அகன்ற மயிர்க்கண்களையும் மறைத்து சுகப்படுத்துகிறது. கறும்பருக்கள் தோன்ருதபடி பாதுகாக்கிறது. மிருதுவான பட்டுச் சருமத்தை பெற பொன்ட்ஸ் வெனிஷிங் க்ரீமை தனியாக பாவியுங்கள். களங்கமற்ற தோற்றத்துடன் மணிக்கணக்காக பௌடரை சமமாக நீடித்து நிலைத்திருக்கச்செய்ய, பௌடர் பூசுவதற்கு முன் இக் கிரீமை அடித்தளமாக பாவியுங்கள்.




## சருமத்திற்கு புதியதோர் மெருகூட்ட

# பொன்ட்ஸ் வெனிஷிங் க்ரீம்

# ஈழத்தில் இந்து சமயப் பண்பாட்டின் செல்வாக்கு

— பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் —

ஈழநாட்டின் வரலாற்று மரபினை உணர்ந்தவர்கள், சிங்களமக்களுக்கும் தமிழர்களுக்குமிடையே நிகழ்ந்த போராட்டங்கட்குக் காரணம், சிங்கள மன்னர்கள் பக்கச்சார்பற்ற கொள்கையினை நிலைநாட்டத் தவறியமையேயாகும் என்பதனை அறிவர்.

எனினும் இலங்கையைத் தாயகமாகக்கொண்ட தமிழர்க்கும் சிங்களவர்க்கும் பகைமை இருக்கவில்லை. பகைமை நிலவியிருந்தால் தமிழர்களின் இந்துக் கோவில்களுக்கு உதவிகளை, நன்கொடைகளை, நிலபுலன்களை அளிக்கும் அளவுக்கு சிங்கள மன்னர் பண்பு பெற்றிருக்கமுடியாது. முனீஸ்வரக்கோயிலுக்கும், அங்கிருந்த பிராமணர்களுக்கும் பொருளுதவி செய்ததுடன் நிலமான்யமும் அளித்துள்ளனர். கோணேஸ்வர ஆலயத்திற்கு 2-ம் கஜபாகு நெல்வயல்களை மானியமாய் அளித்து குளத்தையும் தம்பலகாமப் பகுதியில் கட்டிக்கொடுத்துள்ளான். துட்டகாமினியினால் கதிர்காமத்தில் ஓர் இந்து ஆலயம் கட்டப்பட்டதாய் அறிகின்றோம்.

சைவம்- தமிழ்- கமத்தொழில்

இந்துசமயமென்பது பெரிதும் சைவத்தையே குறித்ததாகும். சைவமானது, கல்வி, பொருளாதாரம் போன்றவற்றை அடக்கி, வாழும் வகையினைக் குறிக்கும் நெறியாகவே அமைந்தது.

போர்த்துக்கேயரின் வருகைவரை சைவர் என்பது தமிழரையே குறித்தது. இவர்கள் மொழியால் தமிழைப்பேசுபவர்களாயும், தொழிலால் கமத்தொழிலினைச் செய்பவர்களாகவும் இருந்தனர்.

சைவமானது தமிழகத்தில் தோன்றிய நாயன்மார் நால்வராலும் வளர்க்கப்பட்டதாகும். இவர்கள் சமயத்தோடு தமிழையும் இணைத்து வளர்த்தனர். மொழியும் சமயமும் இவ்வாறிணைந்ததற்குச் சான்றுகளைப் பரக்கக் காணலாம்.

இலங்கையிலே தேரவாத பௌத்தம் சிங்களமொழி மூலமும், தாய்லாந்திலும், பர்மாவிலும் அவரவர் மொழி வாயிலாகவும் போதிக்கப்படுகிறது. ஆனால் எங்கும் சைவம் தமிழோடு இயைந்து நின்ற தனிச்சிறப்பினைக் காணலாம்.

சிவனெனும் லிங்கமே முழுமுதற்கடவுளாக இருந்தது. இலங்கையில் பழைய ஆலயங்களெல்லாம் சிவ-லிங்க வழிபாட்டிற்கானவை என்பதை திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரம், முன்னீஸ்வரம் போன்ற தலங்களால் அறியலாம்.

சிவவழிபாட்டின் வீழ்ச்சியும்

ஸ்கந்த வழிபாட்டின் எழுச்சியும்

பதின்மூன்றும் நூற்றண்டு வரையில் லிங்க வழிபாடே முக்கியத்துவம் பெற்றுத் திகழ்ந்தது. ஆனால் இதன் பின் ஸ்கந்த (கந்தசாமி) வழிபாடு எழுச்சி பெறுவதாயிற்று.

பௌத்தம் தோன்றிய இந்திய நாட்டிலேயே அது பிற்காலத்தில் செல்வாக்கினை இழந்து வீழ்ச்சியுற்று இலங்கை போன்ற பிற நாடுகளில் வளர்ச்சியுற்றதைப் போல, ஸ்கந்த வழிபாடும் இந்தியாவில் தோன்றினாலும் இலங்கையிலே முக்கியத்துவம் பெறுவதாயிற்று. கந்தபுராணம் ஸ்கந்த வழிபாட்டு எழுச்சியின் சின்னமே. ஈழநாட்டில் கதிர்காமத்தில் முக்கியத்துவத்தை ஸ்கந்த வழிபாடு பெற்றது. இவ்வாறன எழுச்சியின் விளைவாகவே மாவிட்டபுரம், நல்லூர் ஆகிய பதிகளில் கந்தசாமி ஸ்தலங்கள் எழுவதாயிற்று.

இதன் அடிப்படையில் இதுவரைகாலமும் இருந்து வந்த வழிபாட்டுமுறையாகிய பக்தியுடன் ஞானமும் இணைந்து ஒரு மாற்றமடைந்தது.

முருகனின் துணைவியராகிய வள்ளி, தெய்வானை என்று புராணங்களால் கூறப்படுவது உண்மையில் அவரின் இரு சக்திகளைக்குறிப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட வடிவங்களாகும். செயல் (ஆற்றல்) பொருள் அம்சம் (உண்மை விளக்கம்) என்னும் இரு சக்திகளே அவை. ஞானத்தின் சின்னமாகிய வேல் அறியாமையை நீக்குவதாகும்.

மேல்நாட்டார் வருகையும்

இந்துசமய வீழ்ச்சியும்

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் இந்துசமயம் வீழ்ச்சிபெறுவதாயிற்று. இவர்கள் இந்துசமய வளர்ச்சியைக்குறித்து நின்ற சின்னங்களாகிய கோவில்களைத் தகர்த்தெறிந்தனர்.

ஆனால் இவரிலும் வேறுபட்ட முறையைப் பிரித்தானியர் பின்பற்றி மிஷனரி முறையை வலுவாக்கிக் கல்வித் தாபனங்கள்மூலம் இந்துமக்களை மதம்மாற்றிய போது தொழில் போன்ற வசதிகளைக்கண்டு இந்துக்கள் மதம் மாறுதலுக்குப் பின்னிற்கவில்லை.

மதம்மாறாத இந்துக்களும் அமைதியற்ற சூழலில் தமது முறைக்கமைந்த உணவுண்ணும் இலைகளை மறைத்தும் உருத்திராட்சம் போன்ற சின்னங்களை ஆடைக்குள் மறைத்தும் வாழத் தலைப்பட்டனர்.

மறுமலர்ச்சிக்காலம்

இந்த நிலையில் ஆறுமுக நாவலரின் பணியினால் இந்துக்களின் வரலாற்றில் மறுமலர்ச்சி உதயமானது. இந்துசமயமான தமிழோடு இணைந்தேவளரக் கூடியது என்னும் பேருண்மையையுணர்ந்த நாவலர் சமயப்பனுவல்களை வாசிப்போரின் வயதுக்கேற்றமுறையில் தமிழில் எழுதி தமிழுக்கும் சைவத்திற்கும் பெரும் பணி புரிந்தார்.

ஆனால் நாவலர் ஒரேஒரு தவறினைச் செய்துவிட்டார். சமயத்தினதும், மொழியினதும் முக்கியத்துவத்தை உணர்ந்து தொழிலின் முக்கியத்துவத்தை உணரவும் உணர்த்தவும் தவறினார். இதனால் தமிழரின் பாரம்பரிய கமத்தொழில் புறக்கணிக்கப்பட்டது, இதனால் கிறிஸ்தவ மிஷனரிமாரினாலும், அரசியல் அதிகாரிகளாலும் அளிக்கப்பட்ட அரசாங்க வேலையிலே இந்துக்கள்சேரத்தலைப்பட்டபோது மதம் மாறவேண்டியகட்டாயநிலைக்குள்ளாக்கப்பட்டனர். பெருந்தொகைமக்களும் அவ்வாறு மதம்மாறினர்.

சைவ மக்களின் தொன்மை

விஜயனின் வருகையுடன் ஆரம்பிக்கும் சிங்கள காலத்திற்கு முன்னமே இந்நாட்டில் சைவமும் தமிழும் தழைத்தோங்கியது. வடமத்திய மாகாணப் பகுதிகள் "தெமள ஹத்பத்து" என்று சிங்களவரால் வழங்கப்படுவது அப்பகுதிகளில் தமிழர் புராதன காலமுதல்வாழ்ந்து வருகின்றனர் என்பதை எடுத்துக்காட்டுவதாகும்.

விஜயனின் வருகைக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த நாகர்போன்ற மக்கள் நாகரிகத்தில் பின்தங்கியவர் என்பது பொருத்தமற்றது. விஜயனின் வருகைக்கு முன்னமே வாவிகள் கட்டி வாழக்கூடியசமுதாய அமைப்பில் தமிழர் இருந்தனர். தமிழராகிய நாகரின் வழிபாட்டுச் சின்னமாக நாகம் இருந்தது.

கோவில்காடு, வண்ணான் குளம், தட்டான் குளம், தச்சன்குளம் போன்றவை தமிழரின் பழம்பெரும் குடியிருப்புக்களைக் குறிக்கும். இப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட லிங்கம் சோழர் காலத்திற்கும் முற்பட்ட பண்புகளைக்கொண்டுள்ளது. எனவே இவற்றிற்குரிய மக்கள் நாகரேயாவர். அவர்கள் தமிழர்; மன்னரின் 'ராட்சத அணைக்கட்டை'க் கட்டிய இந்துக்களுமாவர். நாகர்கோவில், நாகபூஷணி அம்மன் ஆலயம் என்பன நாகவழிபாட்டின் முக்கியத்துவத்தைக் காட்டும்.

செல்வாக்கு

சிங்கள மன்னரின் அரசவையை தமிழ் இந்துப்புரோகிதர்கள் வீற்றிருந்து அலங்கரித்துள்ளனர். சேர, சோழ, பாண்டியர் செல்வாக்குற்ற காலத்தில் இவர்கள் இங்கு வந்தனர்.

இந்துசமயம் இலங்கையில் பெற்றிருந்த முக்கியத்துவத்தின் காரணமாக பௌத்த முறைகளில் இந்துசமய அம்சங்கள் இடம்பெற்றன. இவ்விரு சமூகத்தவரினதும் மரண, மணச் சடங்குகளில் பெரும் ஒற்றுமை காணப்படுகின்றது.

விஷ்ணுவின் அவதாரமாகவே பௌத்தர்கள் புத்தரைப் போற்றுவர். கண்ணகி விழாவின் செல்வாக்காகவே கண்டிப் பெரஹரா நிகழ்கின்றது. பெரஹரா என்பதே பிரகாரம் என்பதைக் குறிக்கும்.

சைவக்கோயில்களில் பிரகாரம் முக்கியத்துவம் பெற்றது. பௌத்தகோயில்களில் இதனைக் காணமுடியாது. இந்துக்கோயில்களில் பிரகாரங்கள் பெற்றுள்ள சிறப்பிடத்தை பிரகாரத்தின் செல்வாக்காகவே, கண்டிப் பெரஹராவின் போது பிள்ளையார், விஷ்ணு, முருகன், பத்தினி ஸ்தலங்களுக்குச் சிறப்பிடமளித்துப் பிரகாரம் வருவதைகாணலாம்.

கதிர்காமக்கடவுளின் வழிபாட்டினால், கொழும்பில் வேல்விழாவின் போதும், பௌத்த மக்கள் பெருந்தொகையினராகக் கூடுவதைக் காணலாம்.

இவ்வாறன வகையில் இந்துசமயமானது இலங்கையில் நிலைபெற்றதுடன் அமையாதுபிறசமயத்துறையிலும் அதனைஅண்டிய மக்கள்வாழ்விலும்தனது செல்வாக்கினை ஏற்படுத்திற்று.

[கொழும்பில் நடைபெற்ற சர்வசமய மகாசபையினரின் தீபாவளி விழாவில் கட்டுரையாளர் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம். தொகுத்துஎழுதியவர்: நவசோதி.]

## வித்துவான் கணேசையர் நினைவு அஞ்சலி

— செ. சுந்தரம்பிள்ளை, பி. ஏ. —

தொன்னூல் பலகற்றுத் தொல்காப்
பியமென்னும்
நன்னூ லுரைவிளங்க வைத்தனனே
—பன்னூல்கள்
ஆய்ந்தோர்க ளேத்து மறிஞன்
கணேசையன்;
ஈந்தவுரை வாழ்க வினிது.

O

செந்தமிழ்ச் செல்வி சிறப்படை
யச்சிறந்த
பைந்தமிழ்க் கட்டுரைக ளாயெழுதி
—எந்நாளும்
போற்று புகழ்படைத்தான்
புன்னூலைக் கட்டுவன்
தோற்று கணேசையன் தான்.

O

கற்றோர்க ளேத்தும் கணேசையா
வுன்புகழை
மற்றோர் களுமடைய லாகுமோ
—வற்றாத
பேரறி வாள! பெருவுலகி
லுன்னறிவை
யாரடை யப்போகி றார்.

O

கன்னித் தமிழ்த்தாயின் காதல்
மகனான
உன்னைப் புகழா திருப்பாரோ
—மன்னுபுகழ்
தொல்காப் பியக்கடலில் தோன்று
பொருளீந்து
ஒல்காப் புகழ்கொண்ட தால்.

O

அஞ்ஞானம் போக்கி யறிவை
வளர்த்திடவே
எஞ்ஞான்ற மோயா துழைத்தவனே
—மெஞ்ஞானம்
அண்டிவரு மாணவர்க் கன்போ
டளித்தாய் நீ;
பண்டிதர்க ளானார்கள் பார்.

### வரப்பெற்றோம்

**அண்ணாமலர்:** (திராவிட முன்னேற்றக்கழகத் தளபதி அண்ணாதுரையின் 57-வது பிறந்ததினவிழா வெளியீடு) வெளியிட்டோர் "இளமுழக்கம்" வேலணை நா. வீரசிங்கம். பக்கம் 54 விலை-/50

அண்ணாவின் கண்கவர் உருவப்படம்மேலட்டையை அலங்கரிக்க தமிழ் கூறும் நல்லுலகத்து தமிழ் அறிஞர்கள் அரசியற் தலைவர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் என்போரின் ஆசிச் செய்திகள், கருத்துரைகள், கட்டுரை கவிதைகளுடன் 'அண்ணாமலர்' அறிஞர் அண்ணாவுக்குப் பல்லாண்டு கூறிக்கொண்டு சிறப்பாக வெளிவந்திருக்கிறது.

அழுக்கணவன், புழு, பூச்சி 3-ம் அழிப்பதற்கு புதிய ஜெர்மன் மருந்து

லெபேசிட்

LEBAYCID

BAYER

T'GRAMS:- ROYAEL ROYAL DISPENSARY PHONE: 397 JAFFNA

# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஐப்பசி 29 ஞாயிறு (14-11-65)


## ஜவஹர்லால் நேரு

"காந்தி சுகமாக இருக்கிறாரா?" என்று வட இந்தியாவில் ஒரு கிராமவாசி, அக்கிராமத்தில் பூதான இயக்கத்துக்காக பூஜ்யர் வினோபா பாவே சென்றிருந்தபோது அவரிடம் கேட்டாராம். இக் கேள்வி தமக்கு முதலில் திகைப்பையளித்ததென்றும் ஆனால் அந்தக் கிராமவாசி தனக்கு உண்மையை உணர்த்தியதாகவும் பின்னர் வினோபாஜி ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தில் கிராமவாசியின் கேள்வி பற்றிக் குறிப்பிடுகையில் சொன்னார். காந்தி மறைந்துவிட்டார். உண்மைதான். ஆனால் அவர் மக்களின் உள்ளத்தில் வாழ்கிறார். இதைத்தான் அந்தக் கிராமவாசியின் கேள்வி தமக்கு உணர்த்தியது என்று வினோபாஜி விளக்கம் அளித்தார்.

மறைந்த தலைவர் ஜவஹர்லால்நேருவின் 76-வது ஜயந்தி தினம் இன்று இந்தியாவிலும் உலக நாடுகள் பலவற்றிலும் வழக்கம்போல் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. "சாச்சா நேரு' என குழந்தைகள் செல்லமாகவும் அன்புடனும் அழைக்கும் நேரு மாமா இன்று இவ்வுலகில் உயிர் வாழவில்லை என்பது உண்மைதான். ஆனால் நேரு, குழந்தைகள் முதல் முதியோர்வரை அனைவரின் உள்ளத்திலும் வாழ்கிறார், சமாதானத்திலும் அவர் வாழ்கிறார், சண்டையிலும் அவர் வாழ்கிறார், மலர்களிலும் வாழ்கிறார், மக்கள் உள்ளங்களிலும் அவர் வாழ்கிறார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் சமீபத்தில் சண்டையேற்பட்ட போதும் ஜவஹர்லால் நேருவை உலகமக்கள் நினைத்துப்பார்த்தார்கள். இந்தோனேஷியாவில் புரட்சி ஏற்பட்டுக் கலகங்கள் தோன்றியபோதும் நேருவை மக்கள் நினைத்தார்கள். ரொடீஷியாவில் வெள்ளையராட்சி ஒருதலைப் பட்ச சுதந்திரப் பிரகடனம் செய்தபோதும்; வியட்னாமில் நிலைமை மோசமடைந்து வருவதைக் கண்டும் மக்கள் நேருவை நினைக்காமலில்லை.

நேரு எங்கும் நிறைந்து வாழ்ந்தார், எல்லாப் பிரச்னைகளிலும் அவர் சம்பந்தப்பட்டார். அவர் தெரிவித்த கருத்துக்கள் உலகப் பிரச்னைகளைத் தீர்க்க உதவின. அமைதியை நிலைநாட்டின.

இரண்டாவது உலகயுத்தம் முடிவடைந்தபின் உலகம் இரு வல்லரசு முகாம்களாகப் பிரிந்தன, சோவியத் ரஷ்யாவும் அமெரிக்காவும் தங்கள் வாழ்க்கை முறையே சிறந்ததென்ற அசையாத நம்பிக்கையுடன் மற்றவரின் வாழ்க்கை முறையையும் கொள்கையையும் பரவவிடாமல் தடைசெய்வதில் தீவிரமாக ஈடுபட்டார். இதன்பயனாக இருதரப்பினருக்கிடையிலும் போட்டியும் பொறாமையும் பூசலும் அவநம்பிக்கையும் அதிகரித்து உலகையே இருமுகாம்களாகப் பிரிக்கும் முயற்சிகள் நடைபெற்று வந்தன. இதன்விளைவாக 'நேட்டோ', 'சியாட்டோ', 'சென்டோ' என்ற அமெரிக்க ஆதரவுடனான இராணுவக் கூட்டமைப்புக்களும், ரஷ்ய ஆதரவுடனான 'வார்சா' இராணுவ ஒப்பந்தக் கூட்டமைப்பும் ஏற்பட்டன. இந்நிலையில் இராணுவ பலமோ, ஆயுத பலமோ, பொருளாதார பலமோ இல்லாமல், இரு வல்லரசுகளுடன் இந்தியாவையும் ஒரு சக்திவாய்ந்த அரசாக விளங்கச் செய்தவர் ஜவஹர்லால்நேரு. வல்லரசுக் கோஷ்டிகளுடன் சேராத நடுநிலைமைக் கொள்கையினால் இருபெரும் வல்லரசுகளும் உலகின் இதரநாடுகளையும் தங்களுடன் சேர்த்துக்கொண்டு யுத்தத்திலிறங்கி உலகையே அழித்துவிடாமல் பார்த்துக்கொண்ட பெருமை நடுநிலைமை நாடுகளையே சேரும். கொரியாவில், இந்தோசீனாவில், கொங்கோவில் வேறு எந்த இடத்திலும் அமெரிக்க—ரஷ்ய மோதல் ஏற்படக்கூடிய ஆபத்து ஏற்பட்டபோதெல்லாம் நேருவின், இந்தியாவின்—குரலும் ஒலிக்கும்; கூடவே இந்தியாவின் சமரச முயற்சியும் வெற்றியளிக்கும். ஐக்கிய அரபுக் குடியரசுக்கும் பிரிட்டனுக்குமிடையில் சூயஸ் நெருக்கடி தோன்றியபோதும் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்குமிடையில் கியூபா நெருக்கடிதோன்றியபோதும் இந்தியா தனது சமரசப் பணியைச் செய்யத் தவறவில்லை. சர்வதேசப் பிரச்னைகளில் தலையிட்டு அமைதியை நிலைநாட்ட உதவியதன்மூலம் இந்தியநாட்டின் நலனையும் நேரு பாதுகாத்தார்.

மக்களின் பெருமதிப்பிற்குரியவராக விளங்கியபோதிலும் தன்னிலையை நேரு மறந்ததில்லை. மக்களின் அபிப்பிராயத்துக்கு மதிப்புக் கொடுத்தார். அவர் நினைத்திருந்தால் சுலபமாக இந்தியாவின் சர்வாதிகாரியாகியிருக்கலாம். ஜனநாயகத்தில் அசையாத உறுதிகொண்டவர். உலகின் உண்மை நிலையை நன்கு உணர்ந்தவர். தனி மனிதனின் கஷ்டத்தைக் கண்டாலும் உடனடியாக உதவி புரியும் இரக்க சிந்தை படைத்தவர்.

இந்தியாவுக்கு எதிரிகளே இல்லையென்று உறுதியுடன் நம்பியவர். வேறுபட்ட வாழ்க்கை முறைகளையும், கொள்கைகளையும் பின்பற்றுவோர்களும் கூட ஒருவர் விஷயத்தில் மற்றவர் தலையிடாமல் உலகில் ஒற்றுமையாக வாழமுடியுமென எண்ணியவர். அதற்காக பெரும் முயற்சியும் செய்தவர். சோவியத் ரஷ்யாவில் புல்கானின் பிரதமமந்திரியாக இருந்தசமயத்தில் ஸ்ரீ நேரு மாஸ்கோவுக்குச் சென்றிருந்தார் அங்கு கிரெம்ளினில் நேருவை கௌரவிக்குமுகமாக நடைபெற்ற விருந்துபசாரத்தில் புல்கானின் பேசுகையில், "நாங்கள் ரஷ்யர்கள். நண்பர்களென்றால் இறக்கும் வரையில் நண்பர்களாகவே இருப்போம். பகைத்துக் கொண்டால் இறக்கும் வரையிலும் பகைவர்களாகவே இருப்போம்" என்றார். இதற்கு ஸ்ரீ நேரு "எங்களுக்குப் பகைவர்களே கிடையாது" என்று ஒரே வார்த்தையில் பதிலளித்தார்.

## இன்று நேரு ஜெயந்தி

# குழந்தைகள் உள்ளத்தில் வாழும் நேரு மாமா

நேரு மாமா இன்று உயிருடன் இல்லை. ஆனால் ஒவ்வொரு குழந்தையின் உள்ளத்திலும் அவர் வாழ்கிறார். எத்தனை கடமைகள் இருந்தாலும் குழந்தைகளைக் கண்டால் அவர்களுடன் கொஞ்சி மகிழத்தவறமாட்டார். மனிதருள் மாணிக்கம். இன்று ஜவஹர்லால்ஜியின் 76-வது பிறந்ததினம். இத்தினம் இந்தியாவில் வழக்கம்போல் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகின்றது. உலகின் பல பாகங்களிலும் இன்று நேருஜியின் பிறந்ததினத்தை குழந்தைகள் தினமாகக் கொண்டாடுகிறார்கள். மேலேயுள்ள படத்தில் நேருஜி உயிர்வாழ்கையில், ஒருசிறுவனுக்கு அவன் சட்டையில் பதக்கம் ஒன்று அணிகிறார். சிறுவனின் மகிழ்ச்சிக்குக் கேட்கவேண்டுமா?



மலர்களையும் மழலைகளையும் நேசித்த நேரு மறைந்துவிட்டார். ஆனால் மக்கள் மனதிலிருந்து மறையவில்லை.

நேருஜியுடன் நெருங்கிப் பழகிய சிலரின் கருத்துக்கள் இங்கே தரப்படுகின்றன:-

ஜவஹர்லால் அருமையான மனிதர். மனிதப் பண்பு உடையவர். இதன் காரணமாகவே அவரை மிகவும் விரும்புகிறார்கள். அவரை நன்றாகக் காணவேண்டுமென்றால் / வீட்டில் சிறு குழந்தைகளோடு அவர் விளையாடும்போது பார்க்கவேண்டும். அவர் இருக்கும் பொழுது ஒரே சிரிப்பும் தமாஷுமாக இருக்கும்.

—விஜயலட்சுமி பண்டிட்

ஃ ஃ ஃ

அவருடைய பார்வை குறுகிய தேசிய எல்லைக் கோட்டை மீறியது. அவர் உலகப் பிரஜை. துணிவு மிகுந்தவரும் சுயநலமற்றவருமான நேரு இன்றைய உலகசபையில் அவசியம் வேண்டிய ஒருவர்.

—ஹோரஸ் அலெக்ஸாந்தர்

ஃ ஃ ஃ

குழந்தைகளிடத்தும் புகழாளரிடத்தும் நேருஜி பிரியமுள்ளவர். இவர் மனிதர்களுக்குப் புத்துயிர் ஊட்டுபவர். எழுத்து வன்மையும் பேச்சு வன்மையும் மிக்கவர். ஓர் உயர்ந்தலட்சியத்துக்காக இவர் தம்மை ஒப்படைத்தார்.

—பீட்டர்சன் கௌல்ட்

ஃ ஃ ஃ

நேருவைப்போன்ற சக்தியுடைய மனிதர்களைக் காண்பது அரிது. லட்சியத்தில் அளவுகடந்த பற்றும் மிக நுட்பமான அறிவும், அடக்கமும், கவர்ச்சியும் நேர்மையும் உள்ளவர். தனி வாழ்விலும் பொது வாழ்விலும் அவருடைய நேர்மை ஒருபோதும் சிதறியதில்லை. அவர் முழுக்க முழுக்க இக்காலத்தவர். தன் நாட்டு மக்களைக் காட்டிலும் பல நூற்றாண்டுகள் முந்தியவர்.

— ஜான்கார்தர் தம்பதிகள்

ஃ ஃ ஃ

ஒரு சமயம் எனக்குக் கடுமையான தலைவலி. நேருவும் நானும் ஒரு அறையில் தங்கியிருந்தோம். தலைவலியுடன் பெரும் வேதனைப் பட்டபடியே எழுதிக்கொண்டிருந்தேன். வெளியே சென்று திரும்பிய நேரு அறைக்குள் நுழைந்து, என்னைக் கண்டதும் வெளியேறி

(10ம் பக்கம் பார்க்க)

# சேற்றிலே

ஊரார் ஒதுக்குகிற உதவாத குப்பையெலாம்
சேரும் அவைகிடந்து சிதம்பித் தெருவினையே
சீரழிக்கும்; கார்கறுத்துச் சிதறிடும்மா மின்னலொடு
பேரிடியும் கூடுமப்பால் பெரிய துளிகளுடன்
மாரி மழைபெய்து வாய்க்கால் வரம்பிகந்தே
வாரி அழுக்குகளை வழியூடே கொண்டுசெல்லும்

ஃ ஃ ஃ

ஊரின் ஒருபுறத்தே, உடமையுள்ளோர் ஊன்விழியின்
பார்வை பதியாத பள்ளத்தே, முன்சேர்ந்த
ஊத்தை, எலும்புவகை, உயிரிழந்த செந்துகளின்
நாற்ற உடலமெல்லாம் தலியும், அவற்றுடனே
ஓடி வரும்மழைநீர் ஒன்றி, இரண்டின்றிக்
கூடிக் குலவும்பின் கூழாகிச் சேறாகி
நாற்றம் எடுக்குமிந்த நாட்டோர்க் கவைதெரிய
காற்றோ பலதிசையும் கலக்கப் பவனிவரும்

ஃ ஃ ஃ

சீச்சீ இதுவென்ன சீரழிந்த நாற்றமையோ!
மூச்சிற் கலந்துவிட்டால் மோசம் எனக்கடிந்து
மூக்கைப் பிடித்திடுவார் முகங்கொடுக்கார் அப்பக்கம்
நோக்கார் குமட்டுமென்பார் நோயுடலைத்
தாக்குமென்பார்

ஃ ஃ ஃ

வேர்க்க விறுவிறுக்க விரைந்தோடும் நாய்களுடன்
காக்கை கழுகுநரி கண்டால் நலிந்திருக்கும்
ஆக்கை எலும்புகளை அருந்திடவே தம்முட்டாம்
மூர்க்கத் தனமாக மோதும் ஒலிகேட்கும்

ஃ ஃ ஃ

சேற்றிற் குவிந்தகுப்பை சேர்க்கை எருவாக்கும்
நாற்றம் மலிந்துள்ள நாட்டோர்கள் நண்ணாத
அந்த இடத்தினிலும் அரியபொருள் தோன்றும்
விந்தை விளைந்திடுமோ? விதியே அதையறியும்!
ஓர்நாள் சிறியவிதை உயிரூட்டம் பெற்றதனால்
சீர்சேர் முளையென்ற சிறுதலையைக் காட்டியது.

ஃ ஃ ஃ

சின்னாட் செலவின் பின் சிறியமுளை சேற்றினிலே
தன்னையன்பாய்த் தாங்கவல்ல தாயன்பே இல்லாது
தன்னுட் பலமடைந்து தழைத்தந்தப் பள்ளத்தே
சின்னக் கொடிபரவச் செழித்து வளர்ந்ததுவாம்

ஃ ஃ ஃ

காலங் கடந்துமெல்லக் கரையவிந்த வையத்தின்
கோலங் குறியோடு குணமும் குறைவுமெலாம்
மாறி மறைவுற்று மாளும்; திரிபுற்று
வேறாய்ப் பிறிதொன்றாய் விளையும் நியதியிது!
என்றும் நிலைத்ததென இயம்புகிற இவ்வுண்மை
இன்றும் உளதென்று எடுத்தோதும் சாதனமாய்
நாட்டோர் கழித்தொதுக்கும் நடுத்தெருவின்
குப்பையின்று
ஊட்டம் உடைத்தான உணவாக, உட்கொண்டு
பள்ளப் புலத்தினிடை பாரோர் விழிபார்க்க
மெள்ளக் கொடியுயர்ந்து மேலேதெரிந்ததுவாம்

ஃ ஃ ஃ

# 'இயக்கி அசக்கி'

—மு. ஜெயரத்தினம்—

கடந்த சில வாரகாலமாக உலகத்து மக்களை வியப்பிலும் பயத்திலும்மூழ்கடிப்ப போன்று கிழக்கு வானத்தில் ஓர் ஒளிப் பிழம்பு தென்படுகிறது. இதனை முதல்முதலாகக்கண்டவர்கள் யப்பானிய தேசத்து விஞ்ஞானிகள் என்றுகூறப்படுகிறது. இதனை தூமகேது (Comet) என்கின்றனர் சிலர். மற்றும் சிலர் செயற்கைக் கிரகப்போட்டியில் ஈடுபட்டிருக்கும் விஞ்ஞானிகள் சில கிரகங்களை, சூரிய விந்தைகளை ஆராய விட்ட நூதன கருவிகளாயிருக்கலாமென ஐயப்படுகின்றனர். அவர்கள் ஐயப்படுவதற்கும் ஆதாரம் இல்லாமற் போகவில்லை. ஆனல் அவர்களின் ஐயத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதுபோன்றுவான்வெளி நிபுணர்கள் அது உண்மையில் தூமகேது தான் என்று கூறிவிட்டனர். உலகுக்குஇன்றைக்கு காட்சியளிக்கும் தூமகேது போன்றது பல ஆண்டுகளுக்கொரு முறைதான் காணப்படும் எனக் கூறப்படுகிறது. எங்கள் அறிவுக்கெட்டிய மட்டில் கீழே தரப்பட்ட இடைவேளைகளில் தூமகேதுகள் பரந்தவெளியில் அற்றுப் போகாவிடில் பூமிக்குக் காட்சியளிக்குமென கூறப்படுகிறது. மக்கள் கண்ணுக்குப் புலப்பட்ட தூமகேதுக்களில் மிகவும் நீளமானதும், பூமியை நெருங்கி வந்ததும் "கேயிலிஸ்'' என்ற தூமகேதுவாகும். இது தோன்றிய காலத்தில் பூமியை முட்டிவிடுமோ என்று பலர் அஞ்சும்படி அது மண்ணுலகை நெருங்கி வந்தது. கேயிலிஸ் அவ்வாறுபூமியை தொட்டிருக்குமாயின் பூமி அழிந்துபட்டிருக்கும். ஆனல் தெய்வாதீனமாக அது நடைபெறவில்லை. இதன் பின்னர் இற்றைவரை காணப்பட்ட தூமகேதுக்களில் தற்போதைய இயக்கிஅஸேகி பெரிய தெனக்கூறப்படுகிறதுஇதன் வாற்பக்கம் 7,800,000 மைல் நீளமென்றும், இது சூரியனை நெருங்கி வந்து கொண்டிருந்ததென்றும், அச்சமயத்தில் அதன் ஒரு பகுதி உடைந்துபோனதால் மற்றப்பகுதி சூரியனில் மோதிக்கொள்ளாது சூரியனைத்தாண்டி வலம் வந்த தென்றும் கூறப்படுகிறது. இப்படிச் சுற்றிச்சென்று கொண்டிருக்கும் தூமகேது பரவளைவுப்பாதையையே ஏற்றுச்செல்லும். கடந்த சில வாரமாக இத்தூமகேதுவின் போக்கை அவதானிக்குமிடத்து, தூமகேதுவின் பாதையும், பூமியின் பாதையும்வெவ்வேறுபாகையில் இருப்பதைக் காணமுடிகிறது.

## உலகுக்கு ஆகாது!

தூமகேதுகள் தோற்றுவதினல் உலகுக்குத் தீங்குஏற்படலாம் என்று கூறுகின்றனர். இன்னெரு சாரார் என்றைக்கும் மனச்சஞ்சலப் படாதவர்கள் இதனல் ஒரு பாதகமும் ஏற்படாதென்று நம்புகின்றனர்.

பரந்தவெளியிலுள்ள தீக்குளம்புகளின் சுழற்சியினல் வெளியே எறியப்பட்ட பொருட்கள் காலக்கிரமத்தில்குளிர்ந்து கற்களாகவும், உலோகத் தூசுகளாகவும் உந்தப்பட்ட வேகத்தில் பரவளைவில் சென்று நமது கிரக சஞ்சாரமாகிய சூரிய மண்டலத்துக்குள் இழுபட்டு சூரியனைச்சுற்றுகிறதென்றும் காலகதியில் சில சமயம் இது எரிந்து விடுகிறது அல்லது மீண்டும் 100, 1000 அல்லது பலகோடி ஆண்டுகளுக்குப்பின் தோற்றப்படுகிறதென்றும் கூறப்படுகிறது. தற்பொழுது காணப்படும் எரிவெள்ளி7,500,000 மைல் நீளமும் 1,000,000 மைல் அளவு அகலமும் கொண்டதாக இருக்கலாமெனக்கணிக்கப்பட்டுள்ளது. இது தொடக்கத்திலிருந்ததிலும் பார்க்க சிறிதாயிருக்கிறதென்றும், அது உடைந்து விட்டதென்றும் கூறுவோருமுளர்.

இத்தூமகேது உலகுக்குக் காட்சிகொடுப்பதினல் ஏதும் கேடு ஏற்படுமா என்ற கேள்வி எழுகிறது? பௌதீகவியலின்படி இதனல் கெடுதி ஒன்றும் ஏற்படாது. இது இயற்கையின் விந்தை என்று கொள்வர். இருந்தபொழுதும் இத் தூமகேது வானவெளியில் சஞ்சாரம் செய்வதினல் பல ரசாயன மாற்றமும், சடப்பெருள் மாற்றமும் ஏற்படுகிறது. இதனல் இயற்கையின் போக்கில் மாறுதலும், இம்மாற்றத்தினல் மனிதர்களிடையேயும் மிருகங்களிடையேயும் மாறுதல்களும் சம்பவிக்கவும் இடமுண்டாம். புராண இதிகாசங்களிலும், சரித்திரங்களிலும், தூமகேதுகள் காட்சி கொடுக்கும் காலங்களில் அல்லது இரண்டோ மூன்றே ஆண்டுகளுக்குப்பின்னர் மக்களுக்கும் உலகுக்கும் கெடுதிகள் ஏற்பட்டுள்ளதென்பதை இவர்கள் எடுத்துக் காட்டுவர். இந்த அனுபவத்தைக்கொண்டு உலகில் பஞ்சம், பிணி, கலம்பகம், பெரியோர் மறைவு ஏற்படக் கூடுமென எதிர்பார்த்திடலாம். எனவே மனிதன் தனது மதியினல் இத்தூமகேதுவின் விக்கினங்களைக் தவிர்த்துக்கொள்ள வழி தேடிக்கொள்வதே உத்தமம். சுருங்கக்கூறின் அண்ட சராசரங்கள் ஒரு நியதிப்படி இயங்கிக்கொண்டே இருக்கின்றன. அவற்றில் தோற்றமும் அழிவும் நாளுக்கு நாள் நடந்து கொண்டேயிருக்கிறது. இதனையே இறைவனின் நர்த்தனம் என்றும் கூறுவர் ஞானிகள். எனவே இறைவன் சக்தியில் நம்பிக்கையுள்ள மெய்யடியார்க்கு வானம் துளங்கிலென் மண் கம்பமாகிலென்?

---

வரப்பெற்றோம்

**கம்பராமாயணக்காட்சி:** (கவி நயக்கட்டுரைகள்) ஆக்கியோன்: பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை. பக்கம் 128. விலை ரூ 2/00

கம்பராமாயணக் காட்சி என்னுங் கதையைத்தழுவி பண்டிதமணிஎழுதிய 27கவி நயக் கட்டுரைகளைக் கொண்டது இந்நூல். மந்தரை சூழ்ச்சிப்படலம் கைகேயி சூழ்வினைப் படலங்களில் நயம் மிகு 63 செய்யுள்களையும் 70க்கு மேற்பட்ட அடிகள், தொடர்களையுந்தெரிந்தெடுத்து பாத்திரங்களின் இயல்புகளைக் கம்பர் எடுத்துச் சொல்லும் தனிச் சிறப்பை திருவள்ளுவத்தில் உரைத்துக்காட்டி, ஏனைய இலக்கிய பாத்திரங்களோடு வேண்டுமிடத்து ஒப்பிட்டு எழுதப்பெற்ற இக்கட்டுரைகள் இலக்கிய இரசிகர்களுக்கோர் விருந்து. ஜி. ஸி. ஈ. போன்ற உயர்வகுப்பு மாணவர்க்கு ஒரு வரப்பிரசாதம். இந்நூல் கிடைக்குமிடம்: தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம்.

# திரு

கங்குல் உலகத்தை கருங்கல் நிறமாக்கி
எங்கும் பரவியுள எழிலை மறைக்கையிலே
திங்கள் முகிலென்ற திரைநீக்கத் தாரகைகள்
தங்கள் முறுவலினல் சாகசமே செய்தாலும்
மண்ணிற் கவிந்தஇருள் மறைந்த அழகதனைக்
கண்ணில் அவைகாட்ட காரணராய் ஆகவில்லை
மங்கி இருள்பெரிய மரத்தின் அடிநிழலாய்
தங்கி இருப்பதனைத் தளர்திடயார் வல்லாரோ?

ஃ ஃ ஃ

சூழும் இருளீந்த துயரத்தை நீக்கிடவே
கோழி சிறகடித்துக் கூவிற்று கொம்பிலுள்ள
கூட்டிற் றுயில்பயின்ற குருகு விழித்திசைக்கும்
பாட்டின் சுவைபரவப் பரவையலை தாளமிட
வம்பார் மலர்சிரிக்க வளியும் இதமீய
தும்பி சுழன்றெங்கும் சுவையாய்ச் சுதிகூட்ட
நம்பிக்கை இல்லாதார் நலிவநுபோற் சக்தியின்றி
வெம்பி யழுதுமதி மீனினங்கள் போய்மறைய
பாரோர் புதுநாளைப் பார்க்கவே வானத்தில்
கூரார் கிரணங்கள் கொண்டே யிருள்கொன்று
சூரியனர் வான்மீது தோன்றிடவே அவ்வேளை
சீரிற் றிளைத்தியற்கை தெளிவுற் றிலங்கியதாம்

ஃ ஃ ஃ

பள்ளப் புலத்தினிடை படித்தபெருஞ் சேற்றினிலே
கொள்ளை அழகுடனே கூடி உயர்கொடியின்
அரும்பின் அதரத்தை ஆதவனர் உள்ளத்தால்
விரும்பியன்பு முத்தமிட மெள்ள இதழ்விரித்து
சேற்றின் அழுக்கிடையே சிரித்தலரும் தாமரையின்
ஏற்றம் அனையவொன்று எங்குண்டு கூறிடுவீர்?

ஃ ஃ ஃ

தீண்டாதார் வீட்டிலுள திரவியத்தை நீட்டுகையில்
வேண்டாம் எனவிலக்கும் வீணருண்டோ மேதினியில்
சேற்றின் அழுக்குள்ளே திருமகள்தன் செங்கையால்
ஏற்றி இலங்கவைத்த இன்ப விளக்கத்தை

நாட்டில் உயர்ந்தவர்கள் நாவில் உறைகவிஞன்
ஏட்டிலுயர் பாவாக்க ஏதமிலாச் சாத்திரத்தை
கற்ற கலைச்சிற்பி காதலித்துத் தானுக்கும்
பெற்ருேர் தவிசிலிட புகழ்சேர்ந்த சைத்திரிகன்
சித்திரமாய் தீட்டிவிட்டான் செகத்தோர்
அதைக்கண்டு
அத்தன் ஒருவனெனும் அழியாத உண்மையைப்போல்
''அழகின் முழுமையெலாம் ஆக்கும் திருவேநல்
ஒளிசேர் கதிரவனின் உள்ளங் கவர்ந்தவளே
என்று துதிக்கின்ருர். இன்றைச் சமுகத்தில்
நன்ரு தரமுளதா? நல்ல குடியினிலே
பிறந்த் உரிமையுடன் பேரதனைப் பார்த்திடுவீர்!
சிறந்த பொருளுக்குச் சீவியமும் தோன்றுகிற
குடியும் உயர்வில்லை? குணமே பெரிதன்றே
குடிசைப் பிறப்பினிலும் குணமே உயர்வென்ற
உண்மைக் குதாரணமாய் ஊத்தைமலி சேற்றினிலே
வண்மைக் கொடியீந்த மலரான தாமரையை
கண்டே தெளிந்திடுவோம், கருத்தை யறிந்துளத்தே
கொண்டே மகிழ்வுறுவோம் குணத்தினையே
போற்றிடுவோம்.

—இ. நாகராஜன்

# தித்திப்பு

## தண்டித்த ஆசிரியருக்கு தண்டம்

தெனலியில் பாடசாலை மாணவன்ஒருவனைத்தண்டித்த குற்றத்துக்காக ஆசிரியர் ஒருவருக்கு பத்து ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது.

ஃ ஃ ஃ

## மழைக்காலம்

கொண்டக்டர்: யாரப்பா, பஸ்நின்று இவ்வளவு நேரமாகிவிட்டது; இறங்குவதற்கென்ன?

பிரயாணி: பஸ்ஸுக்குள் வைத்த மாங்கன்று வேரூன்றிவிட்டது. இதோ பிடுங்கிக்கொண்டு வந்துவிடுகிறேன்.

—கணேஷ்

ஃ ஃ ஃ

## பெயரைப்பார்த்து மயங்காதே!

'ஓநாய்களுக்கு மத்தியில் ஒரு நிர்வாணி' என்று மகுடமிட்ட ஒரு ஜெர்மன் மொழிப்படம் ஆங்கில விளக்கக் குறிப்புகளுடன் சர்வதேச பவனி வந்துகொண்டிருக்கிறது. பெயரைப் பார்த்தமாத்திரத்தே படத்தில் பாலுணர்வைத் தூண்டும்கினறு கட்டங்களும், சம்பவங்களும் நிறைய இருக்கும் என்று எண்ணிக்கொண்டு படம் பார்க்கப்போகிறவர்கள் நிச்சயம்ஏமாற்றமடைவார்கள். இராணுவ வீரர்களுக்கு ஓர் அனதைக் குழந்தை கிடைக்கிறது. அக்குழந்தையை அவர்கள் அதிகாரிகளுக்குத் தெரியாமல் வளர்ப்பதற்கு ஏற்படும் துன்பங்களையும் இன்னல்களையும் சித்தரிப்பதுதான் 'நேக்கட் எமங் தி உல்ப்ஸ்' என்ற இப் படத்தின் கதை!

ஃ ஃ ஃ

## நிர்வாண ஊர்வலம்

ஓவியக்கலைஞர்களுக்கும், சிற்பிகளுக்கும் மாதிரி அழகிகளாகப் பல முறைகளில் போஸ் கொடுக்கும் பாரிஸ் நகர நிர்வாணப்பெண்கள், வேலை செய்யும் மற்றப்பெண்களுக்கு அளிக்கப்படும் சமூகப் பாதுகாப்பு வசதிகள் தமக்கும்அளிக்கப்படவேண்டுமென்று கோருகின்றனர். தங்கள் கோரிக்கைகளுக்கு ஆட்சிபீடம் செவிசாய்க்காதுபோனல் நிர்வாணமாக வீதிகளில் ஊர்வலம் வரப்போவதாகவும் அவர்கள் பயமுறுத்தியுள்ளனர். இந்தப்பெண்கள், பிறந்த கோலத்துடன் பாரிஸ் வீதிகளில் ஊர்வலமாக வந்து தொழில் மந்திரியிடம் மகஜர் கொடுக்குமாறு கோரப்பட்டிருக்கின்றனர்.

ஃ ஃ ஃ

## ஊமையர் பேசும் தொலைபேசி

ராபர்ட் ஃபர்மன் ஓர் ஊமை. பேசுபவரின் உருவம் தோன்றக் கூடிய பிக்ஷர்போன் என்ற நவீன தொலைபேசி மூலம் நியூயோர்க் சந்தையிலிருந்து டிஸ்னிலாண்டில் (கலிபோர்னியா) உள்ளமற்ருெரு ஊமையுடன் சைகை காண்பித்தே பேசிவிடுகிருர்.

ஃ ஃ ஃ

## பழனி மலை லிப்ட்

இனிமேல் பழனி செல்லும் பக்தர்கள் சிரமப்பட்டு படிகள் ஏறிச்செல்லவேண்டியதில்லை. அவர்கள் கோலமாமயிலில் குலாவியிருக்கும் பழனியாண்டவனைத் தரிசிக்க மலைமீது செல்லமின்சாரத்தால் இயங்கும் லிப்டை(விசைஏணி)தேவஸ்தானம் அமைத்துவருகிறது. வேலைபூர்த்தியானதும் இந்திய ஜனதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணன் இதனைத் தொடக்கி வைப்பார்.

ஃ ஃ ஃ

## வானெலியில் சிறுகதை

இலங்கை வானெலி தமிழ்ப்பகுதியார் அண்மையில் சிறுகதை வாரம் கொண்டாடினர்கள் அல்லவா? அப்பொழுது ஒலிபரப்பான தேர்வுக்கதைகளை 'வளர்பிறை' என்ற இலங்கை வானெலி சஞ்சிகையில் வெளியிட கதை எழுதிய எழுத்தாளர்கள் கூறிய யோசனையை அதிகாரிகள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்களாம். பிரசுரமாகும் ஒவ்வொரு கதைக்கும் மேற்கொண்டு சன்மானம் வழங்கவேண்டும் என்ற பணப்பிரச்னை அதற்குக் காரணமாயிருக்குமானல் தங்களுக்கு அந்த சன்மானமே வேண்டாம்; சும்மா பிரசுரியுங்கள் என்று தெரிவுக்கதைகளை எழுதியவர்கள் எல்லோரும் ஒரேமுகமாகச் சம்மதம் அளிக்க இப்பொழுது எண்ணியுள்ளார்களாம். இன்று சிறுகதை வெளிவராத பத்திரிகைகளையோ சஞ்சிகைகளையோ ஒருகைவிரலுக்குள் எண்ணி முடித்து விடலாம். கதை இலக்கியம் அப்படி விறுவிறுப்பாக வளர்ச்சிபெற்றுவரும் புதுயுகத்தில் விஞ்ஞானப் புதுமையான எங்கள் வானெலியின்(வளர்பிறை) சஞ்சிகை மட்டும் கைவசம் உள்ள சிறுகதைகளைக்கூட வெளியிடத் தயங்குவது ஏனே? எப்படியும் வளர்பிறை தேய்பிறையாகிவிடக்கூடாது என்பதில் நமக்கும் சிரத்தையுண்டு.

ஃ ஃ ஃ

## வனக்காட்சி

ஆசை பெற விழிக்கும் மான்கள் — உள்ளம்
அஞ்சக் குரல் பழகும் புலிகள் — நல்ல
நேசக் கவிதை சொல்லும் பறவை — அங்கு
நீண்டே படுத்திருக்கும் பாம்பு!

— பாரதி

## உங்களுக்குத் தெரியுமா?

○ உலகில் அமைதியை ஏற்படுத்தபணியாற்றிவரும் முக்கியமான தலைவர்களில் ஒருவரான ஊதாண்டின் (ஐ. நா. தலைமைச் செயலாளர்) பெயருக்கு பர்மிய மொழியில் ''இரும்பு'' என்று அர்த்தம். 'ஊ' என்பது திரு போன்ற மரியாதைச் சொல்.

○ பர்மா புரட்சி அரசின் தலைவர் ஜெனரல் நீவின் பெயருக்கு ''சூரியன் உதித்தான்'' என்று அர்த்தமாம். அதாவது அருணோதயம்.

○ பர்மாவின் முன்னாள் தலைமை அமைச்சர் 'யூநூ' என்ற பெயருக்கு 'இளமை' என்று பொருளாம்.

○

○ பர்மா நாட்டின் தலைநகரான ரங்கூனைப் பற்றி ஒரு விவரம்: யாங்கோவ் என்ற பர்மியச் சொல்லிலிருந்து வந்தது ரங்கூன் என்ற ஆங்கிலப் பெயர். யாங்கோவ் என்ற பர்மியச் சொல்லுக்கு 'போர்முடிவு' என்று பொருளாம்.

○ மனிதன் தன் வாழ்நாளில் சராசரி 200000 இறாத்தல் சாப்பிடுகிறான். தன் எடையைவிட இது 1400 மடங்கு அதிகம்.

○ மனிதன் சாதாரணமாக நிமிடத்துக்கு 30 தடவைகள் கண்சிமிட்டுகிறான்.

○ உலகத்தில் ஏறக்குறைய 12000 வகை மீன்கள் உள்ளன.

○ உலகத்தில் 180,000 வகை வண்டுகள் உள்ளன.

○ 10,00,000 வகை மிருகங்கள் உள்ளன.

○ 9,000 வகைப் பறவைகள் உள்ளன.

○ 25,000 வகை தாவரங்கள் உலகத்தில் உள்ளன.

○ ஒரு தேனீக் கூட்டில் 30,000 தேனீக்கள் வசிக்கின்றன.

○ ஒரு ஜோடி கரப்பான்கள் ஒரு வருடத்தில் சுமார் 8000 கரப்பான்களை உற்பத்தி செய்கின்றன.

சிறுவர் தொடர்கதை

# கீதா விலாஸ்

கு. ராதா ரமணன்

(5)

பிரபு, அது ஒரு பெரிய கதை. என்னசெய்வது, நாம் நம்பிக் கெட்டுவிட்டோம்! சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன் எம்மிடையே காவற்கன்னி என்றொரு மந்திரி இருந்தாள்! அவள் பட்டத்திற்கும் பதவிக்கும் ஆசைப்பட்டு எம்மைக் காட்டிக் கொடுத்துவிட்டாள் மன்னா! எமது போர்த் தந்திரங்கள் மற்றும் அரசியல் இரகசியங்களை எல்லாம் லஞ்சம் வாங்கிக் கொண்டு மிதுன சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினிக்குச் செய்தி கொடுத்துவிட்டாள்! இதன் விளைவாகத்தான் மிதுன வீராங்கனைகள் எமக்கெதிராகப் போர்தொடுத்த போது எம்மால் ஒன்றுமே செய்யமுடியாத நிலை ஏற்பட்டது. எமது கோட்டை கொத்தளங்களை அவர்கள் திட்டமிட்டபடி இரண்டு நாட்களில் கைப்பற்றிக் கொண்டார்கள். இச்சம்பவம் நடந்து ஐந்துஆண்டுகள் ஆகின்றன! இப்போது நாம் மிதுன சாம்ராஜ்யத்திற்கு ஆண்டுக்கு பத்தாயிரம் பொன் கட்டிவருகிறோம்.

''அது ஒருபுறமிருக்கட்டும். நான் மன்னனாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையை இன்னும் கூறவில்லையே!''

''அதுவும்ஒருபெரியகதைதான்...'' எனச் சிரித்துக் கொண்டே சொல்லத் தொடங்கினாள்!

''எமது சாம்ராஜ்யம் வீழ்ந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், காவற்கன்னி எமது சிற்றரசின் அரசியாக்கப்பட்டாள். அவள் கொடுமையின் மறு உருவம்! இரக்கம் என்ற சொல்லுக்கு அவளின் இதயத்தில் இடமேயில்லை! மென்மையான கடற்கன்னிகளை வைத்து முரட்டு வேலைகள் எல்லாம் செய்வித்தாள்! அவளின் அநீதியைத்தாங்க மாட்டாது எம்நாட்டைச் சேர்ந்த ஒரு பெண் நமது முழு முதற் கடவுளாகிய சமுத்திர ராணியை வேண்டிக்கடும் தவம்புரியத்தொடங்கினாள்! அப்பிரஜையின் தவத்தைக் கலைப்பதற்கு காவற்கன்னியால் எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவுமே தோல்வியடைந்தன! ஈற்றில் சமுத்திரராணி அப்பெண்ணுக்குக் காட்சியளித்து உனக்கு என்ன வரம்வேண்டுவதென வினவினாள்!

உடனடியாக அப்பெண் தன் நாட்டு மக்களுக்காக வரம்வேண்டினாள்.

''எம் கண் கண்ட தெய்வமே! எம்நாட்டின் குடிமக்கள் யாவரும் தாங்கொணாத கொடுமையிலே அவதிப்படுகிறார்கள்! எம்சிற்றரசின் தலைவி செய்யும் கொடுமைக்கு அளவேயில்லை! எமது இன்னல்கள்யாவும் துடைக்கப்படவேண்டும் தெய்வமே!

''கொடுமைகள் பல செய்யும் காவற்கன்னியே அழிந்து போகக்கடவாய்?''

மேற்கண்டவாறு சமுத்திரராணி சபித்துவிட்டு மறைந்துவிட்டாள். இது நடந்து அடுத்த வினாடியே காவல் கன்னியின் உடல் சாம்பலாகியது. அதன் பின்னர் எமது தலைமைப் பீடம் எவராலும் நிரம்பப் படவேயில்லை. இதனால் மிகவும் துன்பப்பட்டோம். எம்நாட்டின் அரசியல் குட்டிச்சுவராகிவிட்டது. எவ்வித கட்டுப்பாடுமில்லாததால் சிற்றரசின் விஞ்ஞானிகள் யாவரும் எம் இனத்திற்கு தீங்குவிளைவிக்கக் கூடிய பரிசோதனைகளைச் செய்து கொண்டேயிருக்கிறார்கள்.''

ரமேஷ் ஆத்திரத்துடன் கேட்டான்.

''என்ன அநியாயம்? இங்கும் விஞ்ஞானிகளின் அக்கிரமம் இருக்கிறதா? பூலோகத்தில் தான் அணுகுண்டு, ஐதரசன் குண்டு போன்ற மனிதவிரோத சக்திகளை அவர்கள் கண்டு பிடிக்கிறார்கள் என்றால் இங்கும் அப்படித்தானா? விஞ்ஞானம் இங்கும் முன்னேறியிருக்கிறதோ?''

இதைக்கேட்டதும் ரமேஷின் தளபதி கலகலவெனச் சிரித்தாள்!

(தொடரும்)

# சிறுவர் பூங்கா



## முளையில் தெரியாத நல்ல பயிர்!

'விளரும் பயிரை முளையில் தெரியும்' என்பார்கள். அதனால் இளமையில் 'ஏனோ தானோ' வாகஇருந்தவர்கள் எதிர்காலத்தில் ஒன்றுக்கும் உதவாதவர்களாகிவிட வில்லை!

அந்தச்சிறுவனைப் பள்ளியில் சந்தித்தவர்கள், 'இந்த மரமண்டைக்குப் படிப்பு ஒரு கேடா?' என்றுகிண்டல் செய்திருக்கிறார்கள். 'எலும்பும் தோலுமான இந்த உடல் எப்படித்தான் நடக்கிறதோ' என்று கேலி செய்தவர்களும் உண்டு. அந்தப் பலவீனமான உருவத்தைக் கண்டு எல்லாரும் பரிகாசம் செய்வார்களாம்.

ஒரு நாள்—முரடன் என்று பெயரெடுத்த ஒரு பையன் தன்னுடைய துருதுருத்த கைகளைத்திருப்தி செய்ய விரும்பி அந்த'எலும்புக்கூட்டிடம்' வந்தான். தன்னைக் கண்டு மற்றவர்கள் பயப்படவேண்டுமென்று பேராசைபிடித்த முரடனது கை வீச்சுக்குகன்னத்தைச்சிவக்க வைத்து, அவன் காலுக்கு வணக்கம் செலுத்தியவர்கள் அந்தப்பள்ளியில் அநேகர்! இந்தப் 'பொடியன்' மட்டும் எம்மாத்திரம்......? தூசு!

மற்றவர்கள் நினைத்தார்கள், அடிபட்ட சிறுவன் சுருண்டு கீழே சாய்வான் என்று! ஆனால் நடந்தது வேறு; முரடன் எதிர்பாராத தாக்குதலால் கீழே விழுந்து துடித்தான்!

சமயம் குறுக்கிட்ட போது அந்தக்கோழை வீரனானன்; சிறுவர்கள் பாராட்டைப் பெற்றான். அதைப் போலவே 'இவனுக்கேன் படிப்பு?' என்று ஏளனப்படுத்தப்பட்டான். ஒருநாள்; பின்னால் ஈடு இணையற்ற பொறியியல்வித்தகனானன்.

அந்த முளையில் தெரியாத பயிர்தான் சர் ஐசக் நியூட்டன்!

-பாமா

## மாமா வந்தார்!

— சாரணைகையூம் —

மாமா வந்தார்
மாமா வந்தார்
மாம்பழத்தோடு
மாமி வந்தாள்
மாமி வந்தாள்
மல்லிகையோடு,

மாமாப் பொண்ணு
வள்ளி வந்தாள்
மரப் பொம்மையோடு
மாமாப் பையன்
இராமன் வந்தான்
மத்தளத் தோடு.

சின்னப்பிள்ளை
எனக்கெதுவும்
செய்து வந்தாரோ?
பின்னால் வந்த
பெட்டியிலே
பூட்டி வந்தாரோ?

ஒன்றுமில்லை
என்று சொன்னால்
ஒதுங்கிடு வேனே!
இன்று முதல்
மாமாவுடன்
எனக்கென்ன பேச்சு.

★

## கண்காணிப்பிற் சிறந்தவரே

அரியாலையூர்
-- வே. ஐயாத்துரை --

சட்டை தொப்பி
சப்பாத்து
சரியாய் மாட்டி
வார்பூட்டி
சட்டத் தோடே
ஊர்காக்கும்
கெட்டிக் காரர்
பொலிசாரே

பட்டி கட்டிப்
பணிசெய்வார்
பதவியில் உயர்வைக்
கொண்டவரே
பட்டி ஏறும்
பலவழக்கைப்
பறந்து சென்றே
பிடிப்பாரே
எட்டுத் திக்கும்
நகர்காவல்
இரவும் பகலும்
செய்வாரே
துட்டர் தம்மை
துரந்திடுவார்
சூழ்ச்சி யாகப்
பிடிப்பாரே

கட்டுப் பாட்டில்
நிறைந்தவரே
கண்காணிப்பிற்
சிறந்தவரே
கொட்டும் மழையைப்
பாராரே
கொண்ட பணியைச்
செய்வாரே.

## கதருக்கு முக்கியத்துவம்

நான் மந்திரியாகஇருந்தால், அரசாங்கத்தின் எல்லா நடவடிக்கைகளிலும், கிராமங்களையும் கதர்கிராமக்கைத் தொழில்களையும் கேந்திரமாகக்கொண்ட வேலைகளுக்குப் புத்துயிரளிப்பேன். — காந்திஜி

# கோழி வளர்ப்பில் புதிய முறை

கோழிப் பண்ணைத்தொழில் பழைய நிலையை விட்டு இப்பொழுது முன்னேற்ற வழியில் சென்றுகொண்டிருக்கிறது. ஒரே அடை காக்கும் முறையில் பல நூற்றுக்கணக்கான குஞ்சுகளைப் பொரிக்கும் நடுரக அடைகாக்கும் முறை, இப்போது கையாளப்பட்டு வருகிறது.

சென்ற சில ஆண்டுகளாக கோழிப் பண்ணைத்தொழில் வளர்ச்சியைக்கண்டு வருகிற ஒருவருடைய கருத்து இது. தம் நாட்டில் இப்புதியமுன்னேற்ற வழிக்கு மிகவும் உதவியவர் அவர். அமெரிக்க கோழிப்பண்ணை நிபுணர் டாக்டர் ஏர்ல். என். மூர் என்பது அவருடைய பெயர்.

கோழிப் பண்ணைத் தொழில் வளர்ச்சிக்கு டாக்டர் மூர் கூறுகின்ற கீழ்க்கண்ட யோசனைகள் பயன் உள்ளவையாகும்.

1. தீவனத்தில் அபிவிருத்தி

கோழிப்பண்ணை வளர்ச்சிக்கு இதுவரை நல்ல தீவனம் ஒரு பெரும் இடையூறாக இருந்தது. இப்போது வணிக முறையில் தீவனம் உற்பத்தி செய்யும் தொழிலில் சில பெயர்பெற்ற ஸ்தாபனங்கள் ஈடுபட்டிருப்பதால் பண்ணை வளர்ச்சிதுரிதமாக நடக்கும்

2. நல்ல இனம்

அமெரிக்க ஆர்போர் ஏக்சர் வகை கோழிகளை மகாராஷ்டிராவில் உள்ள அவருடைய பண்ணையில் விரைவில் வளர்க்கப்போவதால் கூடிய விரைவில் பெரிய அளவில் கோழிகளை வளர்க்க முடியுமென்கிறார் அவர். இது கோழி வளர்ப்புக்குப் பெரிதும் ஊக்கமளிக்கும்.

3. விஞ்ஞான முறையில் கோழிப் பண்ணை நிர்வகிப்பதில் பயிற்சி

இவ்வகையில் பண்ணை ஆட்களுக்கு ஒரு மாதம் முதல் 6 மாதங்கள் வரை உஸ்மானியப் பல்கலைக் கழகம் பயிற்சியளிக்கிறது. இப்படிப்பட்ட பயிற்சிக்கு ஆதரவு மேன் மேலும் பெருகுகிறது.

4. நல்ல மலிவான கோழிக் கூண்டுகள் அமைப்பது

கிராமங்களில் 100 முதல் 200 கோழிக் குஞ்சுகளை வளர்க்க மூங்கில் மூலம் கோழிக்கூண்டுகள் அமைக்கலாம். இதே முறையில் 2,000 கோழிக்குஞ்சுகளை வளர்க்கவும் ஏற்பாடு செய்யலாம்.

5. இறப்பு விகிதத்தை குறைக்க வழி

ஆழ்ந்த கவனம், நல்ல மருத்துவ வசதிகள் அதாவது ஊசி முறைபோன்றவை மூலம் இறப்பு விகிதத்தை 2 சத வீதத்திற்கோ அல்லது அதற்கும் குறைவாகவோ குறைக்கலாம்.

விற்பனை வாய்ப்பு

உபரி முட்டைகளை வைத்துப் பாதுகாக்ககுளிர் சாதன வசதிகள் வேண்டும். 10,000 முட்டைகள்வரை சேமித்து வைக்க வசதியிருந்தால் விற்பனைக்கு வசதியாகஇருக்கும்.

இந்தியாவில் தீவிர விவசாயத்திட்டம் அமுலில் உள்ள பகுதிகளில், கோழிப் பண்ணை வளர்ப்பு முறையை மேற்கொள்ள இவ்வாண்டு இறுதிக்குள் டாக்டர் மூர் முடிவு செய்திருக்கிறார்.

நாடுமுழுவதிலும்நடத்திய ஆராய்ச்சிகளின் பயனாக கிட்டிய பலன்களைக் கொண்டு, கோழிப்பண்ணை வளர்ப்பில் புதிய முறைகளை புகுத்துவதன் மூலம்கிராமப் பொருளாதாரத்தினைப்பலம் பெறச்செய்வதே இப் புதிய முயற்சியின் நோக்கம்.


" லேடன் " LEYDEN
தயாரிப்புகள்:-
● பெனியன்கள்
● ஸ்போட் சேட்டுகள்
● ரி சேட்டுகள்
● கால்மேசுகள்
(Nylon & Cotton)
லேடன் இன்டஸ்றீஸ் லிமிடெட்
7, ஆஸ்பத்திரி வீதி, : : யாழ்ப்பாணம்.

## சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு வார சிறுகதை, கவிதைப் போட்டி

# குன்றெடுத்த தடந்தோளான்

பாராட்டுக் கதை 2

நா. யோகேந்திரநாதன்

இருளைக் கிழித்துத் தம் ஒளிக்கதிர்களின் ஆதிக்கத்தைநிலைநிறுத்தத்திராணியற்ற விண்மீன்கள் கூட்டம், அங்குமிங்குமாக மின்னிக்கொண்டிருந்தன.

அந்த ஒளியைவிட மேம்பட்ட சக்தி மனித மனதுக்குள்ளே சஞ்சரித்து, வாழ்வின் விநோத ஓட்டங்களுக்கு வழி வகுப்பதை அப்படியொன்றும் விந்தையென்று சொல்லிவிட முடியாது.

நிலத்துக்கு மணல் பாரமாயும், மணலுக்கு மனிதன் பாரமாயும் தோன்றுவிட்டாலும், அவனுக்கு நினைவுகள் பெரும் பாரமாகவே இருந்தன. நினைவின் குடைவுகளால் நெளிந்துகொண்டிருந்த மனதைப் பிரதிபலிப்பதைப்போல் சிவானந்தன் அப்படியும்இப்படியும்உடலை அசைத்தான்.

நீரைத்தள்ளிக் கரைமேற் கொண்டு வந்து போதிய மென்காற்று அவன் உடலைக் குளிரவைத்தது. கண்ணுக்கு எட்டியும் எட்டாமலும் நீருக்கு மேற்கவிந்திருந்த இருளுக்குக் கீழ்ப்பதுங்கியிருக்கும் பெரும் 'குபேரபுரி' அவன் மனத்திரையில் நிழலாடிச்சென்றது. அங்குமிங்கும் ஓடித்திரியும் மீன்கூட்டங்கள் அள்ளித்தரவிருந்த செல்வத்தின் பெறுமதியை உலகம் அறியாவிட்டாலும் அவன் அறிந்திருந்தான்.

கடற்கரை மணலில் ஒருமுறை புரண்டான்.

பிரபல அரசியல் வாதிகள் பாராளுமன்றப்படிக்கட்டில் கால்வைப்பதற்காகச் சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு என்ற சொல்லை தாரமாக அணிசேர்த்தபோது அச் சொல்லுக்குச் செயல் வடிவம் கொடுத்ததனால் அவன் மனிதனுனான்.

மனித தத்துவத்தின் தன்மையை உணராதவர்கள் அதன் அர்த்தத்தை திரிபுபடுத்தி படிப்பையும் குலத்தையும் சொல்லித்தடுத்தவர்களுக்குஅவன் கொடுத்த பதிலடி நிலைமாற்றம்.

அவன் படிந்துவிட்டு உலகத்திற்கும் வீட்டுக்கும் பயனற்ற 'உணவு தின்னி'யாயிருந்தபோது அவனைப்பற்றி அக்கறைகாட்ட நேரமற்ற பிரமுகர்கள், அவன் விதிக்கெதிராகத்தொழிலில் இறங்கிப்போராட்டம் ஆரம்பித்தபோது புத்திமதி சொல்லப் புறப்பட்டதையெண்ணிஆச்சரியப்பட்டிருக்கிறான். அவர்கள் கண்ணோட்டத்தில் இன்னொருவர் உழைப்பில் அவர் பெற்றவரோ பெருதவரோ, உடலை வளர்ப்பது தான் கௌரவமா?

சிவானந்தனும் படித்தபின் கிடைக்கப் போகும் பகட்டு வாழ்வு என்னும் கானலை எண்ணிக்கண்விழித்துப்புத்தகங்களைப் புரட்டும் குருட்டுப் போக்கான சமுதாயத்தின் அலையடிப்பிலே அள்ளுண்டு சென்று பி. ஏ. என்ற பட்டத்துடன்திரும்பி வந்தது உண்மைதான். ஆனால் சரித்திரத்திலும், பூமிசாத்திரத்திலும் பார்க்க அவன் சமூகவியலிற் கழித்த காலம்தான்கூட. சமூகத்தை விஞ்ஞானக் கண்ணோட்டத்துடன் நோக்கியபோதுதான் வீறிட்டெழும் வேறோர் சமூகம்தெரிவதைஉணர்ந்தான். அந்த ஏற்றத் தாழ்வற்ற இனிய சமுதாயத்தை ஏற்றி வைக்க அவன் எடுத்துக் கொண்ட உறுதி வளர்ந்து கிளைவிட்டு இன்று காய்க்க ஆரம்பித்திருந்தது.

தங்களைத் தாங்களே உயர்த்தி அந்த உயர்வைப் பாதுகாக்க மற்றவர்கள் தங்களை உயர்த்த வைத்து திமிரேறிப்போன ஜாதியில் பிறந்தவன் சிவானந்தன். படிப்பதைத் தொழிலாகக் கொண்ட அவனுக்குச்சும்மா இருப்பதைத் தொழிலாகக் கொள்ளமுடியவில்லை. இலங்கையைச் சுற்றியுள்ள கடல்களில் சிறந்த மீன்கள் இருப்பதாக யப்பானிய நிபுணர்கள் கூறிய செய்தியும், நம் நாடு மீன்வாங்க வெளிநாடுகளுக்கு அள்ளிக்கொடுக்கும் பணம் ஏற்படுத்திய வயிற்றெரிச்சலும் மூளைக்குள் புகுந்து நரம்புகளை இயக்கியதோடு நில்லாமல், கழுத்தைப் பிடித்துக் கடற்கரையிற் கொண்டுவந்து நிறுத்தியிருந்தன. கடலைப் பார்த்துக் கவிதை பாடிய கற்பனை வீரர்களின் நுகத்தடியிலிருந்து கழன்று கட்டுமரத்திலேறி கடலைத் துளாவப் புறப்பட்ட போதுதான் தொழிலிலையென்று சொல்லி வறுமையைஅணைத்தவர்களை எண்ணிப்பரிதாபம் ஏற்பட்டது. துள்ளி விழும் அலைகளிடையே தாவும் மீனினத்தை விலையாக்கினால் நம் வறுமையையும், நாட்டின் ஏழ்மையையும் எவ்வளவு சுலபமாக விரட்டி விடலாம் என்பதை உணர்ந்துகொண்டான்.

ஒரு காலம் விதி அவனைப் பார்த்துச் சிரித்தது.

இன்று விதியைப் பார்த்து அவன் சிரித்தான்.

அவன் வெற்றியை உணராத மனிதர்கள் அவனைப் பார்த்துச்சிரித்தனர்.

அவர்களைப்பார்த்துச்சிரிக்கப் போகும் ஏற்றத் தாழ்வற்ற முரண்பாடுகள் களையப்பட்ட புதிய சமுதாயத்தைப் பார்த்து யார் சிரிப்பார்?

காற்றும், கடலும் கதை பேசியதால் ஏற்பட்ட இரைச்சல் அவன் காதைத் துளைத்தது. இது ஒரு இரைச்சலா?

அவன் மேல் அக்கறை கொண்ட ஆயிரம்பேர் ஒன்ருய்ச் சேர்ந்து இரைந்தபோதும் அவன் அசைந்து கொடுக்கவில்லையே!

''தம்பி எங்கடை சாதியிலை பிறந்துவிட்டுமீன்பிடித்தால் நாளைக்கு நாலுபேர் என்ன சொல்லுவினம்?''

அவன் புன்னகை பூத்தான். அந்த நாலு பேரில் அவரும் ஒருவர்தானே!

அடுத்தவரின் கேள்வி இன்னும் விசித்திரமாயிருந்தது. ''இப்படி தாழ்ந்த தொழில் செய்தால் யார் உனக்குப்பெண்தருவினம்.''

சிவானந்தன் மீண்டும் மௌனம் சாதித்தான்.

வாழ்வுக்காகப் பெண்ணை அல்லது பெண்ணுக்காக வாழ்வா?

கோரிக்கைகள் வசவுகளாய் மாறி, வசவுகள் பிரச்சாரமாகி ஊரார்வாயிலெல்லாம் அவனே எழுவாயாகிச் சஞ்சரித்த போதும் அவன் நிலைமாற்றத்திலோ மனமாற்றத்திலோ மாற்றம் ஏற்படவில்லை.

அலைகடல் அவனை இருகரம் நீட்டி அழைத்தது.

பொருள்வளம் அவனைப் பார்த்துப் புன்னகை பூத்தது.

பெண்ஒருத்தியின் நினைவுகள் அவன் எண்ணங்களில் கலந்துவிட்டதே ஒருதனிக் கதை.

காவியங்களிலும், கதைகளிலும் படித்தவற்றிற்கு உருவம் கொடுக்க முயன்றபோது காதல் என்ற பிரமையில்தான் கட்டுண்டதைச் சிவானந்தன் உணர்ந்துகொண்டான். அதை உறுதி செய்வதற்காகத்தான் போலும். சந்திராவும் உயிரைஅவனிடம்கொடுத்து வீட்டு வெற்றுடலுடன் அவனைவிட்டு செல்லுவாள். அந்த எண்ணங்கள் நெஞ்சில் உராய்ந்துசென்றபோது விநோதமான வலியொன்று கண்டு வேதனையேற்படுத்தியது. காதலின் மென்மையான ஊடுருவலால் பாதிக்கப்பட்ட அவனால் நினைவுகளை வேறுவழியிற் திருப்ப முடியவில்லை. மெல்லிய நூலிழைகளைப் போல் பின்னிப் பிணைந்து இசைமீட்டிய அந்த நினைவுகளின் நடுக்கத்திலே நெஞ்சமிட்ட ஓலம் கடலலைகளையும் மேவி இரைச்சலிட்டது. கண்களை மெல்ல மூடிக் கொண்டான்.

''சிவா! உங்கள் காதலின் ஆழத்தை என்னால் அறிந்து கொள்ள முடியவில்லையே!''

''எனக்கு மட்டும் முடிகிறதா சந்திரா?''

''காலஓட்டத்தின் சுழல்களுக்கு மேம்பட்டது நம் காதல். எந்த வெளிசக்திகளாலும் அதை அழிக்கவே முடியாது.''

காதல் நினைவுகளின் திவ்வியமான இழையோட்டம் கீறிவிட்ட மகிழ்ச்சி ரேகைகள் அவன் முகத்தை மலர்வித்தன. அந்தப் பிரமையின் தடுமாற்றத்தினால் ஏற்பட்ட ஏக்கம் ஏற்படுத்திய வெப்பத்திலே அந் நினைவுகள் ஆவியாகிப் பெருமூச்சாய் வெளியேறின.

அந்த நினைவுகளுடன் பின்னிப் பிணைந்து வந்த வேறு சில கடந்த காலத்தின்கதிர் வீச்சுகளால் வேதனைமுறுக்கு வேகமாக ஏறியது. அவன் மீன்பிடிக்கப்போவதைப்பற்றிச் சொன்னபோது சீறிய சீறலும் அவனுடைய உறுதியில் ஆட்டம் காணமுடியாதபோது அழுத அழுகையும் அப்படியே கண்முன் வந்து நின்றன. அன்று அவனை விட்டுச் சென்றவள் இன்றுவரை அவனைச் சந்திக்க வரவேயில்லை.

அவளைச் சுற்றித்திரிவதற்கு அவன் உள்ளத்திற்கு அனுமதி கொடுத்தாலும், உடலுக்குக் கொடுக்க விரும்பவில்லை. ஆனால் அவளோ இன்று இரத்த நாளங்களிளெல்லாம் புகுந்த காதலென்ற பசையைப்பூசி தன்னைத்தானே ஒட்டியிருந்தாள். அந்த ஒட்டலுடன் ஒரேயடியாக உறவாடவும் முடியாமல் விட்டோடவும் முடியாமல் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான்.

''சிவா!''

''ம்..'' நினைவுக்கும் நடப்புக்கும் இடைப்பட்ட நிலையில் மயக்கத்தில் பதிலளித்தான் அவன்.

''கண்ணைத் திறவுங்கள் சிவானந்தன்!''

கண்ணைத் திறந்த சிவானந்தன் திடுக்குற்றுன்.

முன்னால் நிற்பவள் சந்திராவா?

நினைவுகளின் மயக்கத்தில் ஏற்பட்ட சுழற்சியில்பிறந்த கனவா?

மணலின் மேற் சாய்த்திருந்த தன்னுடலை நிமிர்த்தி எழுந்து நின்றுன், சிவானந்தன்.

''சந்திரா! இந்நேரத்தில் எங்கே வந்தாய்?''

நிலவற்று வானம் தவிப்பதை உணர்ந்து வந்திருக்கிறுளா?

''என் வாழ்வில் உங்களைத் தவிர வேறு யாரையாவது சந்திக்கும் தேவை ஏற்படும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?''

அப்படியே அவளை அள்ளி அணைக்க வேண்டும் போல் தவிப்பது மனமோகைகளோ? தடுக்கும் உணர்வு பெயரற்றதொன்றோ?

பேச்சற்ற மௌனத்தில் இருவரும் மிதந்த ஒரு கண நேரம் இன்பத்திற்கும் துன்பத்திற்கும் இடைப்பட்ட திரிசங்கு வெளியில் மிதந்தது. ஒருவரையொருவர் புரிந்து கொள்ள முடியாத அந்தக்கும்மிருட்டிலும் ஒருவர் கண்களிலிருந்து புறப்பட்ட ஒளிக்கதிர்களை மற்றவர் கணித்துக்கொள்ளத் தவறவில்லை.

தொடர்ந்து நேரத்தை அமைதிக்குப் பலிகொடுப்பதைச் சந்திரா விரும்பவில்லை. ''நீங்கள் இப்படிப் பெற்றுரையும் சுற்றத்தாரையும் எதிர்த்து அவர்களிடம் வெறுப்பை விலைகொடுத்து வாங்குவது நியாயமா?''

சிவானந்தன் மெல்லச் சிரித்தான். ''மனிதனின் வாழ்வு ஒரு சில வருடங்கள். ஆனால் மனித குலமோ யுகாதி யுக காலம் வாழப்போகிறது. விரைவில் அழியப்போகும் தனி மனிதரின் அபிப்பிராயத்தை பெற்றுக்கொள்ளவதற்காக மனித குலத்தை நசுக்கி வரும் பிரச்னைகளை எதிர்த்துப் போராடாமல் இருக்கமுடியுமா? நான் இத்தொழிலில் இறங்கியதால் கிடைக்கப்போகும் பொருளாதார ஏற்றம் இன்னும் எத்தனையோ இளைஞர்களை இதில் இழுத்துவிடப்போகின்றது. இதனால் சமூக ஏற்றத் தாழ்வுகள் தாமாக சரியப்போகின்றன,''

''உயிருக்காபத்தான இத் தொழில்தான்வேண்டுமா?''

''மற்ற மீனவர்கள் உயிரைக் கரையில் வைத்து விட்டாபோகிறுர்கள்.''

(8-ம் பக்கம் பார்க்க)

ராக்ரர்களுக்கு . . .

ராக்ரர் உறுப்புகளுக்கு . . .

இன்னும்

ராக்ரர் றிப்பயர்களுக்கு

ராஜா கோப்பறேஷன்

பரந்தன்

## பாராட்டுக் கவிதை

### "விலகுமடா, தமிழன்னை விலங்கு"

— 'கந்தமாதனன்' —

முடிகொண்ட மூவேந்தர் முன்னாள் ஆண்ட
  முறைவழுவாத் தமிழகத்தின் மூளை, ஈழத்தே
கொடிகொண்டு வளர்தமிழா! குற்றங்கண்டேன்,
  கூறுகிறேன் சீறுதே! குறித்துப் பார்நீ!
குடிகொண்ட துன்மனதிற் கொடிய வஞ்சம்,
  கொல்லுமடா! குலபேதக் கொள்கை
   கொண்டாய்!
அடியுண்டாய்! மிதியுண்டாய்! அடிமை யானாய்!
  அலைகின்றாய், இனமொழியும் அழிய இன்றே.

பண்பாடு மிக்கதமிழ்ப் பரத கண்டப்
  பண்டைநிலை திரும்பிப்பார்! பசுவி னுள்ளப்
புண்பாடு தாங்காது புதல்வ னவி
  போக்கினன் மனுநீதி புகன்ற சோழன்!
மண்பாடும் புகழ்ப்பேகன் மயிலைக் காக்க
  வழங்கினன் மணிப்போர்வை! மன்னன் பாரி
விண்பாட முல்லைக்குத் தன்தேர் விட்டான்!
  விளங்கிக்கொள்! சமநீதி விளைவை நீயே.

கோவுக்கும் பறவைக்குங் கொடிக்குங் கூடக்
  கொற்றவர்கள் சமஉரிமை கொடுத்தார்! நீயோ
சாவுக்கு வழிதேடிச் சகோதரத்தைத்
  தள்ளுகிறாய்! ''இழிவான சாதி'' என்றே.
நாவுக்குத் 'தீண்டாமை' நஞ்சு பூசி
  ஞானங்கள் பேசுகிறாய் ஞாயங் காட்டி!
தேவுக்கும் அடுக்காதுன் செய்கை. அந்தத்
  திருக்கோயிற் தரிசனமுந் தீமை தானோ?

நீதியெங்கே? அறமெங்கே? நியாய மெங்கே?
  நிறையெங்கே? தயையெங்கே? நினைத்துப் பார்நீ!
சாதியிங்கே தொழிற்பிரிவிற் சார்ந்த தன்றித்
  தாழ்வுயர்வு நிலைகாணத் தரமோ? சொல்லு!
பாதியிங்கே படுகொலையிற் பரித விக்கப்
  பாகமங்கே கேட்கின்றாய். பலனுண் டாமோ?
தீதியங்கா துன்மரபு திருந்த வேண்டும்.
  சிந்தியடா! சிந்தைதனைத் திறந்து நீயே.

ஒன்றிடடா! தாழ்வின்றி, உயர்வு மின்றி,
  உனக்குள்ளே சமஉரிமை உறுதி யாக,
நின்றிடடா! காந்திமகான் நெறிகைக் கொண்டு.
  நிறைவுண்டு, பெலமுண்டு, நிதானமுண்டு.
சென்றிடடா! உரிமைபெறத் திரண்டு நீயும்!
  சிங்களவர் மத்தியிலே சிங்கம் போல!
வென்றிடடா! தோற்றவெலாம். வீர மைந்தா!
  விலகுமடா! தமிழன்னை விலங்கு மன்றே.

## நடைபாதைச் சித்திரம்

# மனித தோல்வி

தனது முகத்தில் கவலையும், சோர்வும் இழையோடத் தனது எருமைக்கடா வாகனத்தினின்றும் இறங்கினன் எமதர்மராஜன். எருமைக்கடாவை ஒருபுறமாக நிறுத்திவிட்டுத் தனது தலை வணங்கிய இறைவனின் திருமலர்ப் பொற் பாதங்களில், வீழ்ந்து வணங்கிவிட்டு நிமிர்ந்தான் தர்மராஜன்.

முகத்திலே தண்ணொளியும் தேஜசும் ஜொலிக்க, அவனை நிமிர்ந்து நோக்கினுர் இறைவன். எமதர்மராஜனின் திடீர் விஜயம் அவருக்கு வியப்பை அளித்தது. முகத்தில் வியப்பு மிளிர, ''நின் கடமைகள் யாவும் பூரண திருப்தியாக நிறைவேறுகின்றனவா? பின் என்னிடம் வந்த காரணம் என்னை?'' என்று வினவினுர்.

''இறைவனுக்குத்தெரியாததுதான் எது? விஷயம் தெரிந்திருந்தும்எனது வாய் வழியாகவிஷயத்தை அறிய விரும்புகிருர் போலும்!'' என்று மனதினுள் எண்ணிய எமதர்மராஜன் மிகப் பவ்வியமாக, ''தாங்கள், திருவருள்கொண்டு என்னை மன்னிக்கவேண்டும். எனது கடமைகளை இன்று வரை சரியாகச் செய்துகொண்டு தான் வந்திருக்கிறேன். ஆனல் '' என்று தொடர முடியாமல் இழுத்தான்.

''இந்த, ''ஆனல்'' என்ற சொல்லுக்குப் பூலோகத்தில் உள்ளவர்தான்பயப்படுவார்கள். நீ நினது குறையைக் கூறுவாயாக'' -புன்முறுவலுடன் கூறினுர் இறைவன்.

''இல்லை ஐயா! ஆனல் எனக்கு எனது அரியாசனத்திலிருக்கவே பயமாகவிருக்கிறது; நான் நீதி தவறினல் என் தலைக்கு நேர் மேலே ஒரு மயிர் நுனியிற் கட்டித் தொங்கவிடப்பட்டுள்ள மலைப்பாறை அறுந்து விழுந்து என்னை அழித்துவிடுமல்லவா?'' என்று அச்சத்துடன் கேட்டான் யமதர்மன்.

''அதிற் சந்தேகமேன்...? உனது கடமையினின்றும் வழுவவேண்டியநிலை உனக்கு வருவானேன்?'' - அழுத்தலான புன்முறுவலுடன் வினவினுர்சகலமும் அறிந்தவர்.

''மன்னிக்க வேண்டும் ஐயா! பூவுலகினிலே மானிடர்கள் விதம் விதமான, புதிய புதிய மருந்துகளைக் கண்டுபிடித்து ''நோய்'' என்ற சொல்லையே பொருளற்றுப் போகும்படி செய்துவிட்டார்கள்.... நோய் மூலம் உயிரைக்கவர வழி இல்லாமற் செய்துவிட்டார்கள்.... இன்னும் பல பல புதிய இயந்திரங்களையும் கண்டுபிடித்து மனிதர்கள் கஷ்டமற்று வாழவழி கண்டுவிட்டார்கள்...... இதனல் ஒவ்வொரு உயிரினதும் ஆயுட்காலம் முடிந்தபின்னும் அவ்வுயிரைக் கூட்டினின்றும் பிரித்துக்கொணர முடியாமலிருக்கிறது..எனது தூதர்கள் பலர், பல உயிர்களின் ஆயுட்காலம் முடிந்த பின்னர், அவற்றைக் கூட்டினின்றும் பிரித்துக்கொணர மிகவும் கஷ்டப்படுகிருர்கள்.... இதனல்எனதுகடமை நிறைவேற்றமுடியாத ஒன்ருகிவிடுமோவென அச்சமுறுகிறேன். அடியேனது அச்சத்தை ஐயனீர்தான் தீர்த்தருள்பாலிக்கவேண்டும்..!'' -யமதர்மன் தனதுகுறையை எடுத்துரைத்தான்.

''இதற்காகவோ திகிலடைகிருய்? உனது குறையை நான் தீர்க்கிறேன். பூலோகத்திலுள்ள மானிடரிடத்தில் ஆணவமும் ஆசையும் இல்லாமல் நீங்கிவிடவில்லையே!'' என்ருர் இறைவன்.

''ஆணவமும், ஆசையும் நீங்காவிடின் எனது கடமையை நிறைவேற்ற முடியுமா?'' என்று ஒன்றும் புரியாமல் திகைத்தபடியே கேட்டான் இயமதர்மன்.

''பொறுத்திரு, உனக்குப் புரியும். பூலோகத்திலே அடுத்த ஒரு வாரத்திற்குள் உயிரிழக்க வேண்டிய மனிதனின் அடையாளத்தை எனக்குக் கூறிவிடு; நான், அவ்வுயிர் உனது அரியாசனத்தின்முன் வரவேண்டிய நிலையைச் சந்தர்ப்பங்களின் மூலம் ஏற்படுத்துகிறேன்!'' என்ருர் இறைவன்.

கையுடன் கொண்டுவந்த பேரேட்டிலிருந்து அம்மனிதனின் அடையாளங்களை எடுத்துக் கூறினன் இயமராஜன். அதைக்கேட்ட இறைவன், ''அடுத்த முறை நான் பூவுலகிற்கு அருவமாகச்செல்லும்போது என்னுடன் வா! சகலமும் நினக்குத் தெளியும்'' என்ருர்.

இயமதர்மன் மகிழ்ச்சியுடன் எருமைக் கடாவின் மீது ஆரோகணித்தான்.

அடுத்தவாரம்....

ஒரு பிரபலமான சந்தி. அந்த ஊரிலேயே குத்து, வெட்டு, அடி, உதை போன்ற செயல்களுக்கெல்லாம் அச் சந்தி ஒரு முகாந்திரமாக அமைந்திருந்தது. அச் சந்தியிலே மாலைவேளைகளிலும் சனி, ஞாயிறு தினங்களில் நாள் பூராவும் பலர் கூடியிருந்து ஊர் வம்புகளை அலசிஆராய்வது வழக்கம்.

அச்சந்தியின் ஒரு மூலையிலே ஒரு கற்குவியல் இருந்தது. வீதியைத்திருத்துவதற்காக நகரசபையினரால் குவிக்கப்பட்டது அது; ஆனல் அதே குவியலிலுள்ள கற்கள், பக்கத்திலுள்ள வீடுகளையும் திருத்த உபயோகிக்கப்படுவது சகஜமான நிகழ்ச்சி.

அன்று வழக்கம்போல அச் சந்தியிலே யாவருங்கூடினர். சில நிமிட நேர குலாவுதலின் பின் அக் கூட்டத்திலிருந்த ஒருவர் ஒரு பெட்டி (பைக்கட்) சிகரெட் வாங்கி அக்கூட்டத்திலே சிகரெட் புகைக்குமியல் புடையோர்க்குத் ''தானம்'' செய்தார். அவர்கள் அவற்றை 'ஊதித்'' தள்ளிக்கொண்டு ஏனைய புகைபிடிக்காதாரோடு பேசிக்கொண்டிருந்தனர்.

அதேசமயம் புதிய ஒரு மனிதன் அரை வெறியில் அச்சந்திக்கு வந்து அக்கூட்டத்தினை நெருங்கினன்.

வானத்திலே அருவமாக விளங்கிய இறைவன் இயமனை நோக்கி, ''நோக்குக'' என்ருர்.

''எனக்கும் ஒரு பைக்கட் சிகரெட் வாங்கித்தாவேன்!'' என்று கேட்டான், அந்த அரைவெறியிலிருந்த புதிய மனிதன். முதலிலே சிகரெட் ''தானம்''செய்தவர் பையைத் தடவினுர். பின், தனது வாயிலிருந்து வெண் சுருட்டை எடுக்காமலே தனது கையை விரித்து, ''பணம் இல்லை'' என்று சைகை காட்டினுர்.

மறுகணம் அப்புதிய மனிதனின் கை, அவரது வாயிலிருந்த சிகரெட்டைத் தட்டி வீழ்த்திற்று. இதைக் கண்ட ''அவர்''-ஏன், அவன் திடுக்குற்ருன். அவனது மான உணர்ச்சி துள்ளிப் பாய்ந்தது. ''என்னுடைய பணத்தில் நான் வாங்கிப் புகைத்த சிகரெட்டைத் தட்டி வீழ்த்த நீ யார்?''- சிகரெட்டை இழந்த மனிதன் ஆத்திரத்துடன்கத்தியவாறே எழுந்து அப்புதிய மனிதனின் கன்னத்திலே பலமாக அறைந்தான். புதிய மனிதன் - அரைவெறியிலிருந்தவன் - இதை எதிர் பார்க்கவில்லை. அவனது ஆத்திரம் தலைக்கு மேலேறியது. அவனது கை முதலாமவனைச் சாடியது.

மறுகணமே அக்கூட்டம் இருகட்சியாகப் பிரிந்தது. சிலர் சண்டையிலீடுபடவிரும்பாமற்பிரிந்தனர். ஆனல் சண்டையிலீடுபட்டவர் எண்ணிக்கையே அதிகம்... புதிய மனிதனின் சார்பிலும், சிகரெட் வள்ளலின் சார்பிலும் பலர் பிரிந்து துவந்த யுத்தம் நடத்தினர்.

(9-ம் பக்கம் பார்க்க)

அரியாலையூர்

**த. இந்திரலிங்கம்**

---

## சிறுகதை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சந்திரா மீண்டும் மௌனமானுள். நேரப் போக்கில் அவள் மௌனம் துக்கமாய் மாறி, அத்துக்கம் உள்ளே அடைந்து கிடக்கமுடியாமல் உடைந்துவெளியேறிக் கண்ணீராய்ப் புறப்பட்டது.

உள்ளத்தின் ஆட்டமும், கண்ணீரின் வேகமும் கலந்து உடலைக் குலுங்கவைத்தன.

''சந்திரா நான் என்ன சொல்லிவிட்டேன்? ஏன் அழுகிருய்?'' மெல்ல அவள் நாடியைவிரலால் உயர்த்தி முகத்தை நேராகப் பார்த்தான். அவள் பதில் பேசவில்லை.

சிவானந்தன் தொடர்ந்தான். ''சந்திரா! என் இலட்சிய ஈடேற்றத்திற்கு நீயும் துணை நிற்பாயென்று எதிர் பார்த்தேன். அவ்வளவு தான்!''

மெல்ல அவளை விட்டு விலகிச்சென்று, திரண்டு கரையில்மோதிய அலையிற்கொண்டுபோய்க் காலைவத்தான். அவனை அணைத்து மகிழ்ந்துவிட்டு அலைக்கரத்தை உள்ளிளுத்தாள் கடற்தாய்.

ஃ ஃ ஃ

மறுநாள் மாலை, சிவானந்தன் கொண்டுவந்த மீன்களை சந்திராவும் அவனும் சுமந்து சென்ற போது பொருமையினுலும் துவேஷத்தினுலும் கனன்ற சமுதாயம் கூட வாய்மூடி மௌனியாய்ப் பார்த்து நின்றது. ஆனல் ஆதவனும் அலைகடலும், காற்றுமோ ஏற்றத் தாழ்வற்றுத் தாங்கள் செய்யும் சேவையினுல்மறையாத ஜாதிபேதங்களை ஒழிப்பதற்குப்புறப்பட்ட இளம்ஜோடியைப் பார்த்துப்பூரிப்படைந்தன.

உத்தரவாதத்துடன்

பழைய டயர்களைப் புதுப்பிப்பதற்கும்

திறமான றப்பர் பொருட்களை தொகையாக

பெறுவதற்கும்

மிகச்சிறந்த இடம்.

**ஜெனரல் இண்டஸ்றீஸ் லிமிட்.,**

அத்தியடி, யாழ்ப்பாணம்

காட்சி அறை:

20, ஸ்ரான்லி வீதி போன்: 7024

உங்கள் தேவை! எங்கள் சேவை!!

---

# மஞ்சள் நிற மயக்கம் தரும் மஞ்சள் காமாலை

## நோயும் சிகிச்சையும்—7

இப்பொழுது இலங்கையில் எப்பகுதியிலும் சிறுவர் தொடக்கம் முதியோர் வரை இவ்வியாதி ஏற்படுகின்றது. இதை இரு பிரிவாகப் பிரிக்கலாம்.

1. மஞ்சட் காமாலை
2. ஊதுகாமாலை எனப் படும்.

### மஞ்சள் காமாலைக்குக் காரணமும் அதன் உபத்திரவமும்

கல்லீரல் (Liver) உடலுக்கு முக்கியமான உறுப்பாகும். இதை வெட்டிவிட்டால் ஒரு சில மணி நேரத்தில்மனிதன் இறந்து விடுவான். கல்லீரலில் இருந்து பித்தநீர்சுரந்து கொண்டு பித்தப்பைக்கு வருகிறது. இப்பித்த நீரானது நிணம்சீரணமாவதற்கு மிக முக்கியமான பொருளாகும். இப்பித்தநீரானது பல காரணங்களால் தடைப்படுகின்றது.

1. பித்தக் குழாயில் கற்கள் அடைபடுவதால் (Gall-Stones) பித்தநீர் தடைப்பட்டு மஞ்சள் காமாலை ஏற்படுகின்றது. இதனல் கற்களின் மேல் பித்தநீர் தடைப்படுவதால் தாங்கமுடியாத வலி அடிக்கடி ஏற்படும். நோயாளி எப்பொழுதும் நோ வேதனை தாங்க முடியாமல் கஷ்டப்படுவான்.

2. சில புழுக்களின் உட்புகுதலால் கல்லீரல் ஆக்கிரமிக்கப்பட்டுபித்தக்குழாயை அவை தடைசெய்து அதனல் இரத்தம் தேக்கமாகி மஞ்சள் காமாலை ஏற்படலாம். இதைத் தொற்றுவிக்கும் நுண்ணுலங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். ஒன்று உலகெங்கும் பரவியிருக்கும் வைரஸ் வகுப்பைச் சேர்ந்தது. லெப்டொஸ் பைரா எனப்படும் வேறோர்வகைக் கிருமியும் காமாலையை உண்டாக்கவல்லது. இந்த நுண்ணுலங்கள் கல்லீரலை ஆக்கிரமிக்க கல்லீரலே பருமனுகி அப்பொழுது பித்தநீர் கல்லீரலில் தடைப்பட்டு மஞ்சள் காமாலையை உண்டாக்குகிறது.

பித்தத்தை விருத்திசெய்யும் பாண்டுரோகிக்குக் கோஷ்டத்திலும் சாகைகளிலும் உள்ள பித்தம் இரத்தம் மாமிசம் முதலியவற்றைக் காந்தச்செய்து காமாலையை உண்டுபண்ணுகின்றது.

இந்த மஞ்சள் காமாலையானது சிறுவயதிலேயே பற்றிக் கொள்ளக் கூடியது. ஒருநாள் அல்லது இரண்டு நாள் சுரம் தோன்றலாம். சிறுவர்களுக்கு சொல்லமுடியாத வாந்தி-காமாலை முகத்திலும் கண்ணிலும் அதிகமாகப் பார்க்கும் பொழுது தோன்றும். பின் உடலெங்கும் மஞ்சள் நிறம் தோன்றும். சருமத்தின் அடியிலுள்ள பைகளிலும் அதிகமாகத் தோன்றும். பொதுவில் மலபந்தம், அதிக பலவீனம், சித்தப்பிரமை, அதிமயக்கம் அல்லது முழுமயக்கம் என்பன தோன்றும், சிறுநீர் நல்ல மஞ்சளாகி துணியில் பட்டால் கூட நல்ல மஞ்சள் நிறமாகமாறிவிடும். விட்டுவிட்டுஏற்படும் வலி-மூத்திரம் எரிவு முதலியன ஏற்படும். சிறுவர்களிடத்தே இலகுவில் தோன்றி மறையும். ஆனல்முதியோர் கர்ப்பிணி முதலியோரைக் சொல்லவும் கூடும்.

''காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்'' என்ற கூற்றின்படி இம் மஞ்சள் காமாலை ரோகிக்கு உணவு, படுக்கை, உலகம் அனைத்துமே மஞ்சளாகத் தோன்றும். இந்த மஞ்சள் காமாலையைத்தான் மாதவ நிதானத்தில் ஹலீமகம் என்று கூறப்பட்டுள்ளது. சிலர் இதை லோடரம் என்றும் அலசர் என்றும் கூறுவர்.

### 2. ஊதுகாமாலையும் உபத்திரவமும்

இது தவளையைப்போன்ற தேகநிறமுடையது. வீக்க காணப்படும். சில சமயங்களில் சில நோயாளியைப் பார்க்கும் பொழுது பந்து போல உடல் முழுவதும் வீங்கி உருண்டையாகக் காட்சி அளிப்பார். பொதுவில் முகம், கை, கால்கள் வயிறு ஊதினல் போல இருக்கும். ஊதுகாமாலையில் சிறுநீர்ப்பையில் கோளாறு ஏற்படுவதால் உண்டாகின்றது. இதனல் சிறுநீர் குறைந்துபோகக்கூடும். சிறுநீரில் உப்புகள் அதிகமாகக் கழிந்து வெளியேறிப் போகும். இது உப்பல்ல. அல்புமின் (Albumin) எனப்படும். சிறுநீரகம், புரதம் (Protein) முதலியவற்றை ஆரோக்கியமான நேரத்தில் வடிகட்டுகின்றது. நோயுற்ற நிலையில் இவ்விரு பொருட்களையும் வெளியில் விடுகின்றது. இதற்குச் சிகிச்சையாக வைத்தியர்கள் நோயாளி சாப்பிடும் உணவில் உப்புச் சத்து குறைத்துச்சாப்பிடச் சொல்லுவார்கள்.

**க. வேல்மணி**

அரசினர் சுதேச வைத்தியக் கல்லூரி, கொழும்பு

---

2. ஊதுகாமாலை வேறு வகையிலும் பற்றிக்கொள்ளலாம். சிரங்கு உள்ளவர்களுக்கும் தலையில் கடுமையான பேன் உள்ளவர்களுக்கும் சொடுகு முதலிய தொல்லைகளின் மூலமும்வரலாம்.

3. மலேரியாச் சுரத்தினுலும் கொக்கிப்புழுவின் உட்புகுதலாலும் உண்டாகலாம்

(9-ம் பக்கம் பார்க்க)

# நோயும் சிகிச்சையும்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று தற்பொழுது கண்டிருக்கிறார்கள்.

4. இரத்தத்தில் சிவப்பு அணுக்கள் (RedBlood-Corpuscles) குறைந்துபோய் ஏற்படுவதே ஊதுகாமாலைஎனப்படும்.

## மாதவநிதானத்தின்படி

காமாலைக்கு ஏற்ற சிகிச்சையை உற்ற நேரத்தில் செய்யாவிட்டால் வீக்கம் அதிகமாக ஏற்பட்டு கும்ப காமாலை என்னும் கஷ்ட சாத்தியமான ஊதுகாமாலை ஏற்படுகிறது.

ஊது காமாலையில் முகம், கை, கால்கள் வயிறு ஊதியதுபோல் இருக்கும். சருமம் சற்று வெளிறியிருக்கும். சிறுநீர் குறைந்து போகும். சிறுநீர்எரிவு, இதயத்துடிப்பு, இரவு பகல் நித்திரை, சாப்பாட்டில் பிரியமின்மை, நாவில் உணர்ச்சியற்ற நிலை, தன்னையறியாமல்பிதற்றல், சித்தப்பிரமை முதலியன ஏற்படும். ஊதுகாமாலையில் சிறுநீரைச் சோதித்துப் பார்த்தால் உப்பு தோன்றுது. உணவில் உப்புக் குறைப்பது நல்லது.

ஊதுகாமாலை சிகிச்சையில் நல்ல அயமருந்துகளைக் கொடுப்பது சிறந்தது. அதிகமாக இந்நோயானது மலேரியாச்சுரம் உள்ளநேரங்களில் எவருக்கும் வரக்கூடும். அப்பொழுது கவனமாயிருத்தல் வேண்டும். சிறுபிள்ளைகளை நிலத்தில் உருண்டோ புரண்டோ திரிய விடாமல் இருப்பது நலம்.

பாண்டுவில் காமாலை உண்டானால் பித்தஹரமான ஔசதத்தையும் உபயோகிக்கவேண்டும். ஓர் அளவு கடுக்காயையும் ஓர் அளவு கடுக்காய்பூவையும் எடுத்து சமநிறை நீர் சேர்த்து சுண்டக்காய்ச்சி வடிகட்டிக் கொடுக்கவும்,

ஊதுகாமாலை ரோகியாக இருந்தால் அதிகமாக

1. அயசெந்தூரமோ
2. திரிமூர்த்தி செந்தூரமோ
3. மண்டூரச் செந்தூரமோ
4. காந்த செந்தூரமோ

இவற்றுள் ஒன்றை எடுத்து ஒன்று அல்லது 1 1/2 குன்றி எடை எடுத்துத் தேனில் தினம் இருவேளை கொடுக்கவும்.

மண்டூரச் செந்தூரம் கொடுக்கும் பொழுது உப்பு-புளி நீக்கவும். எவ்வித காமாலை ரோகிக்கும் தங்க-அயச் செந்தூரம் 1 முதல் 1 1/2 குன்றியளவு தேனிலுண்ணக் கொடுக்க ஈளை- இருமல்- பசியின்மை முதலியன தீர்ந்து உடலும் அழகு பெறும்.

காமாலையில் எள்ளுப்பிண்ணுக்குப்போல் மலம் வெளியேறினல் சுக்கு, திற்பலி, மிளகு முதலியனவற்றைச் சமஎடை எடுத்துத் தூள் செய்து கொடி மாதுளைச் சாற்றில் கொடுக்க இதனல் மலம் இயற்கை மஞ்சள் நிறம் பெற்று ஆமாசய பக்க வாரங்களில் இருக்கும் வயிற்றுப்பெருமல், இரைத்தல் நீங்கும்.

எந்தக் காமாலை ரோகிக்கும் சுத்திசெய்த சிவதைவேர் சூரணத்தை திரிபலைக் கசாயத்தில் கலந்து கொடுக்கவும். ஒவ்வொரு நாளும் நன்கு முற்றிய வேப்பம் பட்டைக் கசாயத்தை தேன்விட்டுக் தாகவிடாய் நேரங்களில் கொடுக்கவும்.

காமாலை ரோகிகளுக்குக் கண்களின் மேற்புறத்திலே மரமஞ்சள் அல்லது கறி மஞ்சள் தேய்ந்து நேத்திரங்களில் பிரயோகிக்கலாம். ஊதுகாமாலை என்கின்ற கஷ்டசாத்தியமான காமாலையில் சிலாசத்துவைப் பொடி செய்து பசு கோமயத்தில் 15 அல்லது சில நாட்கள் உட்கொள்ளக் கொடுக்கவேண்டும்,

ஊதுகாமாலை ரோகிக்கு கௌரி செந்தூரத்தை திரிகடுகுச் சூரணத்தில் ஒரு குன்றி எடுத்துத் தேனில் 3 நேரமாக 2 மாதகாலம் கொடுத்து வரல்வேண்டும். இதனல் காமாலை படிப்படியாக குறைந்து வீக்கமும் வற்றிவருவதைப் பார்க்கலாம்.

பெருவயிருகவிருக்குமானல் ஊதுகாமாலை ரோகிக்கு தாமிரமெழுகை தினம் இருவேளை 1/2 முதல் 3/4 குன்றி எடை 3 அல்லது 4 நாள் பனை வெட்டில் வைத்துண்ணக்கொடுக்கவும். இதனல் பெருவயிறு குறைந்துவிடும். மஞ்சள் காமாலையுள்ளவருக்கு சீந்தில் கசாயத்தை பாலில் சுண்ட எரித்து எருமைநெய்யில் கலந்து கொடுத்து ஸ்நித்தமாகியடன்அதன்மேல்திருபலை சூரணத்தைக் கொடுத்து விரேசனமாகிய பின்னர் இனிப்பான ஆகாரங்களைக்கொடுக்கவும். திராட்சை ரசம் அருந்தலாம். இதனல் ஜடராக்கினி விருத்தியடைந்து தேகபலமடைவான். அடிக்கடி மாதுளம் பழச் சாறு கருப்பம்சாறு அல்லது தோடம்பழச்சாறு அருந்தச்செய்யலாம். ரோணத்தின் தன்மையின்படி அளவறிந்து கொடுக்கவும்.

எக்காமாலை ரோகிக்கும் சரக்கொன்றைப் புளியையோ அல்லது சிவதைவேர் சூரணத்தையோ நெல்லிக்கனிச் சாற்றில் கலந்து கொடுக்கக் காமாலை ரோகம் தீரும். இம்மருந்துகளாலும் மிகவிரைவில் நோயாளி சுகமடைகின்றுன்.

சிலதேசங்களில் காமாலை ரோகத்திற்கு மருந்து தேவையில்லை என்றுகூறி மாந்திரீகம் செய்வார்கள். அதனலும் குணம் அடைகின்றது.

---

# மனித தோல்வி

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

சிகரெட் வள்ளலிடமிருந்து சிகரெட்பெற்றோர், செஞ்சோற்றுக் கடனுக்காகப் போரிட்டனர். ஏனையோர் நீதிக்காகப் போரிட்டனர். குத்து, அடி, உதை!; குத்து, அடி, உதை! பாதையோரத்திலே குவிக்கப்பட்டிருந்த கற்கள் சரமாரியாக வீசப்பட்டன. வீதியிற்சென்றோர் ஒருபக்கமாக ஒதுங்கினர். திடீரென்று அரை வெறிமனிதனின் கையிலிருந்த பெருங்கல்லொன்று சிகரெட் வள்ளலின் கழுத்தில் தாக்கியது. ''ணங்...,' அவ்''வள்ளல்'' நிலத்தில் விழுந்தான். உயிர் பிரிந்து பறந்தது. ஒரு கணத்தில் கூட்டம்கலையஆரம்பித்தது,

ஃ ஃ

''பார்த்தாயா?'' என்று கேட்டார் இறைவன். ''பார்த்தேன் பெருமானே! இச்சிறியவெண்சுருட்டு இப்படிச் செய்யுமென நான் எண்ணவில்லையே; அந்தச் சமயத்தில் எப்படி அப்புதிய மனிதன் வந்தான்?'' - வியப்புடன் கேட்டான் யமதர்மன். ''அதுதான் சந்தர்ப்பம்... இப்பொழுது இறந்தவன், ''நான்'' என்ற ஆணவத்தினலேயே சண்டையை உருவாக்கினன். இந்த ஆணவமும், சந்தர்ப்பங்களும் இருக்கும்வரையில் உனது கடமையைச் செய்ய விடாமற்தடுக்க மனிதரால் முடியாது'' என்றார் இறைவன். பிரச்னை தீர்ந்து மௌனமானன் இயமன். மனிதனின் இயல்பு அவனுக்கு புரிந்துவிட்டது.

---

# நமது நூல் நிலையம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

'ஏழாலையிலிருந்து சிவஞானசுந்தரம் என்ற இந்த இளைஞர் சிறுகதைகள் எழுதியிருக்கிறார். தமிழ் சிறுகதை இலக்கிய உலகில் இந்த ஊரும் பேரும் புதிதல்ல- உடனே ஒரு கதை அரசனின் ஞாபகம் வரும். அந்தப் பாரம்பரிய மிடுக்கிலேதான் போலும் இவர் துணிகரமாக தனது சொந்தப் பெயரிலேயே கதை உலகுக்கு அறிமுகமாகின்றார்' இவ்வாறு எழுத்தளர் ''நந்தி'' தமது வாழ்த்துரையில் இந்நூலின் ஆசிரியரை அறிமுகப்படுத்தும் போது கூறுகிறார். துணிவு படைத்த இவ்விளைஞருக்கு நல்ல மனத்தோடு ''நந்தி'' கூறிய இன்னெரு நல்வார்த்தையையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாயிருக்குமென்று நம்புகிறேன்.

''தம்பி, உமக்கு கதை எழுத வரும். ஆனல் எழுதுவதற்கு முன் தேர்ச்சிபெற்ற சிறந்த கதாசிரியர்கள் எழுதிய சிறுகதைகளில் ஒன்றைத்தினமும் தேர்ந்தெடுத்து அவற்றின் கதை அமைப்பை அவதானித்து கருத்தை உணர்ந்து ரசித்துப்பலமுறை பாடநூல் போல் படிக்கவும்''

''நந்தி''யின் அறிவுரையை அப்படியே இவ்விளைஞருக்கு அர்ப்பணிக்கிறோம்.

—'இளவேனில்'

○

**இலக்கிய இலக்கணஆய்வுரைகள்:** ஆசிரியர்: த. இராமநாதபிள்ளை. கிடைக்குமிடம் ஸ்ரீலங்கா அச்சகம், கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். விலை: ரூபா 3-50

பருத்தித்துறை புலோலி இந்துக்கல்லூரி முன்னள் அதிபர் திரு. த. இராமநாதபிள்ளை பி.ஏ.'இலக்கிய இலக்கண ஆய்வுரைகள்' என்ற நூலினை மதிப்புரை, அணிந்துரை, முன்னுரை எதுவும் இன்றி எழுதிவெளியிட்டுள்ளார். தமிழ் மக்கள் தனிப்பெரும் செல்வங்களாகப் போற்றும் தொல்காப்பியம், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் ஆகிய நூல்களில் இருந்து சிலவற்றைத் தேர்ந்து இந்நூலில் ஆய்வு செய்துள்ளார். இந்நூலின் முதற்கண் உள்ள சில ஆய்வுக் கட்டுரைகள் கடுந்தமிழ் நடையில் செல்வதால் படிப்போர்க்குச் சில தடங்கல்களை உண்டு பண்ணலாம்.

கவிச் சக்கரவர்த்தி கம்பர் அளித்த கம்பராமாயணம் என்ற தேன்குடத்திலிருந்து சில தேன்துளிகளை ஆசிரியர் எடுத்து ஆராய்ந்து பல கருத்துக்களை அழகாகத்தீட்டியிருக்கிறார். வாலி என்ற குரங்கினை வஞ்சமாகக் கொன்ற இராமர் உண்மையான வீரனு என்பதற்கு ஆசிரியர் வாலிவதைப் படலத்தில் இருந்து சில பாடல்களைஎடுத்துக்காட்டிக்கம்பர் கூறும் வாயிலாகவே இராமர் உண்மையான வீரன் என நிறுவுகிறார். கம்பரின் உலகியலறிவைப்பாராட்டும் ஆசிரியர் தசரதன், இராமன், பரதன், குகன், சடாயு, இலக்குவன், சீதை, மாருதி என்ற பாத்திரங்களின் குண இயல்புகளையும் தனித்தனி அத்தியாயத்தில் விளக்கிச் செல்கிறார்.

கண்ணகி நல்லவளா, கொடியவளா என்ற ஐயத்தைத் தெளிவுசெய்யும்ஆசிரியர் ''இளங்கோவடிகள் கண்ணகியை யாதொருகுற்றமுமில்லாத தெய்வப் பெண் என வர்ணிக்கவில்லை. பாத்திரங்களின் குணநலன்களைப் படைக்கும்போது களங்கமில்லாதவைகளாகச் சிருட்டித்தால் தெய்வ மக்கள் ஆவாரே ஒழிய மானிடராகார். ஒரு தலைவி பல நற்குணங்களால் சிறந்து விளங்கினும் மானுட மகளாதலின் நற்பண்பு சில இல்லாதிருப்பாள். தலைவியிடமுள்ள சிறுமைக்குணம் அந்தத்தலைவியின் பெருமையை சிறப்பிப்பதற்கு ஆசிரியரால் படைக்கப்படும். கற்பின்திறமையைக்காட்டும் நோக்கத்துடனேயேகண்ணகி சிறிய கற்பினளாகப் படைக்கப்பட்டாள்' எனதம்கருத்தினை வெளியிடுகிறார். சிலப்பதிகாரத்தின் சில அம்சங்கள் ஒன்பது கட்டுரைகளில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. தொல்காப்பியத்தின் சில சூத்திரங்களும் இந்நூலில் ஆய்வுக் கண்ணேடு நோக்கப்பட்டுள்ளன.

இலக்கண இலக்கிய ஆய்வுரைகள் படிப்போர்க்கு அறிவைப் பெருக்கி ஆய்வைத் தூண்டும் வண்ணம் அமைந்துள்ளன. உயர்கல்வி கற்கும் மாணவர்க்கு ஒரு பாட புத்தகமாக 'இலக்கிய இலக்கண ஆய்வுரைகள்' என்னும் இந்நூல் அமைந்தால் அவர்கள் அறிவு வளமடைய பெரிதும் உதவுவதாகும்.

— பூரணி

---

தொழில் கல்லூரி மாணவரின்

# 'கண்ணீர்த்துளி' [நாடகம்]

**தா**ன்படும் துயரினை மகன் வாசு உணரா வகையில் அவனைப் படிக்க வைக்கும் தாய் சிவகாமி; இவளின் துன்பத்தை வளர்க்கும் நித்தியானந்தம்; முரட்டு அத்தான் தங்கமணியை விரும்பாது காதலன் வாசுவையே மணக்க விரும்பும் சித்ரா; உண்மையினை உணராது சித்ராவை மணக்கும் வாசுவின் நண்பன் மோகன்; இதனை அறிந்ததும் காதலியின் நல்வாழ்வுக்காக அவர்களை இணைத்துவிட்டு கண்ணீர் விட்டுக்கொண்டே இறக்கும் வாசு—

இவர்களைப் பிரதம பாகமாகக்கொண்டுபின்னப் பட்டகதைதான் கட்டுப்பெத்த தொழில் நுட்பக்கல்லூரி தமிழ் மாணவர் மன்ற சஞ்சிகை நிதிக்காக பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அரங்கேற்றப்பட்ட 'கண்ணீர்த்துளி' என்னும் நாடகம்.

வாசு என்னும் கதாநாயகன் பாகமேற்று நடித்த இளம்பூரணன் சினிமா நடிகர்களைப் பின்பற்றுமலே தனக்கு திறமையாக நடிக்க முடியும் என்பதை நிரூபித்துவிட்டார். காதலியின் திருமண அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றபோது உள்ளப்பிரதிபலிப்பை ரசிகர்களின் மனதைத்தொடக்கூடிய வகையில் நடித்துள்ளார். சிறப்பாகக் குறிப்பிடக்கூடிய காட்சி இது.

சிவகாமியாகவந்த விவேகானந்தராசா துயரத்தை அள்ளித் தெளித்துத் தனக்கு ஆரம்பமுதல் முடியும்வரை சோக பாத்திரத்தையே தந்துள்ளனர் என்பதைப் பதிவுசெய்துவிட்டார்.

சித்திராவாக நடித்த செல்வராணி தான் காதல் காட்சிக்குப் புதியவர் என்பதையும், சோகம், ஆத்திரம்

(10-ம் பக்கம் பார்க்க)

REGAL—JAFFNA
NOW SHOWING!
VICTOR MATURE
ANITA EKRERG
in
ZARAK
(Cinemascope - Technicolor)

கிங்ஸலி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ராஜ் (நீர்கொழும்பு)
தீவொளி (நுவரேலியா) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2, 6, 9-30 மணிக்கு
தென்னட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!
''நான் ஆணையிட்டால்—அது நடந்துவிட்டால்—இங்கு ஏழைகள் வேதனைப் படமாட்டார்''
எம். ஜி ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னு, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த



விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
(ஈஸ்ட்மென்கலர்)

## கண்ணீர்த் துளி

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய உணர்ச்சிகளைத் தன்னால் திறம்பட வெளிக்காட்ட முடியும் என்பதையும் கூருமல் கூறுவதுபோல நடித்துக்காட்டி விட்டார்.

(கட்டை) உருவத்தாலும், உணர்ச்சிகளாலும் உரைகளாலும் நகைச்சுவையை வெடித்தவர் நித்தியானந்தம் என்ற பாகத்தை ஏற்ற கணநாதன்- இவர் வந்த காட்சிகளிலெல்லாம் ரசிகர்களின் சிரிப்பொலியையும் கைதட்டலையும்கேட்க முடிந்தது. இவருக்குத் துணையாக கிளி, மாணிக்கம் ஆகிய பாகங்களில் பலச்சந்திரன், பழனிவடிவேல் என்போர் நடித்தனர்.

மோகன், மாணிக்கம், மாட்டின் ஆகிய பாத்திரங்களில் ஹமீட், லோகிஸ், சிவலோகநாதன் என்னும் மூவரினதும்நடிப்பிலே குறைகூற இடமில்லை. என்ருலும் வளர்ச்சிக்கு இடமுண்டு.

மருள்நீக்கியார், தெய்வேந்திரன்இருவரும் தந்தையர்களாகத் தோன்றி அமைதியுடன் நடித்தனர்.

சச்சிதானந்தம் குழுவினர் தமது ஒப்பனைத் திறமையைச் சிறப்பாக நித்தியானந்தம் வாசு இருபாத்திரங்களிலும் காட்டியுள்ளனர்.

''இவ்வீடு என் இன்பங்களை வளர்த்து துன்பங்களைத்தாங்கியிருக்கு'' என்பது போன்ற பல சிறந்த வசனங்களை கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்புகளை ஏற்ற அருள் எம்பெருமான் புகுத்தியுள்ளார்.

அலுப்பைத் தரும் வகையில் நாடகம் மூன்று மணித்தியாலங்கள் அமைந்து போனுலும் வெறுப்பைத் தரவில்லை என்ருல் அதற்கு கதாநாயகனின் நடிப்பும், நகைச்சுவைப் பகுதியுமே காரணமாகும்.

—நவசோதி

## நேரு மாமா

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டார், சிறிதுநேரம் கழித்து சில, தலைவலி மாத்திரைகளைக் கொண்டுவந்துதந்தார். அதைச் சாப்பிட்டதும் தலைவலி நீங்கிவிட்டது. பிறர் துன்பத்தைக் கண்டு அதைத் துடைப்பதில் சிறிதும் பின்னிற்காதவர் அவர். என் தலைவலி குணமானதும் அவர் சொன்னுர், ''எனக்குத்தலைவலி என்னவென்றே தெரியாது. எனக்கு அது வந்ததில்லை'' இப்படியான மனிதர் வேறு உள்ளனரோதெரியாது. — ஸ்ரீ பிரகாசா

## 17வருட கடுழியம்
### பெண்ணைக்கெடுத்த வழக்கில் தீர்ப்பு

காலி, சனி

15 வயதுள்ள ஆர்.சோமாவதி என்ற இளம்பெண்ணைக் கெடுத்ததாக, எஸ். வி.பியதாஸா, கே.பெந்திஸ்,யூ.பி. கருணதாசா ஆகியோர்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டவழக்கில் மூன்று எதிரிகளுக்கும் கடுழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

காலி அஸைஸ் நீதி மன்றத்தில் நீதியரசர் திரு ஜி.பி. ஏ.சில்வாமுனனிலையில் இவ்வழக்கு ஏழு தினங்களாக விசாரணை செய்யப்பட்டபின், எதிரிகள் குற்றவாளிகள் என ஜூரிசபையினர் ஏகமனதாக தெரிவித்தனர்.

முதலாம், இரண்டாம்எதிரிகளுக்கு மூன்று குற்றச்சாட்டுகளுக்கும் தலா பதினேழு வருடக் கடுழியச் சிறைத் தண்டனையும், மூன்ரும் எதிரிக்கு மூன்றுகுற்றங்களுக்கும் 15 வருட கடுழிய சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

# 'தமிழ் நாடகக் கலைக்கு நல்ல எதிர்காலமுண்டு'
## மட்டக்களப்பு எம். பி. பாராட்டு

மட்டக்களப்பு, சனி

'நீண்ட காலத்திற்குப் பிறகு தமிழ் மணம் கமழும் நல்லதொரு நாடகத்தை கண்டு ரசிக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்தமைக்கு மகிழ்வதாகவும், உயர்தர உத்தியோகத்தர்கள் கலையார்வம் கொண்டு மேடையேறி நடித்ததைப் பார்த்தபோது, தமிழ்நாடகக் கலைக்கு ஒளிமிகுந்த எதிர்காலம் உண்டு என்பதை ஊகிக்கக்கூடியதாயிருக்கிறது எனவும் மட்டுநகர் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் திரு. செ. இராசதுரை, இலங்கைக்கலைக்கழக நாடகக்குழு நடாத்திய மட்டக்களப்பு நாடக விழா மூன்ரும் நாள் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து பரிசு வழங்குகையில் கூறினுர்.

வரலாற்று நாடகப்போட்டியில் முதற்பரிசான கேடயம், கிண்ணம், பாராட்டுப் பத்திரம் முதலியவற்றைப் பெற்ற ''ஆதவனே மன்னிப்பாய்'' என்னும் நாடகத்தை அவர் பாராட்டினுர்.

## நேரு நினைவு பேச்சுப்போட்டி

பம்பலப்பிட்டி, சனி

நேருவின் 76-வது ஜயந்தியைமுன்னிட்டு இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷன் இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான பேச்சுப்போட்டியொன்றை நாளை நடத்த ஏற்பாடுகள் துள்ளது. ரூ. 500 பெறுமதியான நான்கு பரிசுகள் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு வழங்கப்படவிருக்கின்றன.

வெற்றிபெறுபவர்களுக்கு இம்மாதம் 15-ந் திகதி பிரதமர் திரு. டட்லிசேனநாயக்கா பரிசுகள் வழங்குவார்.

## ஜி. ஜி. க்கு வர்த்தக மந்திரி பதவி?

பம்பலப்பிட்டி, சனி

''வர்த்தக அமைச்சர் பதவியிலிருந்து டாக்டர் எம். வி. பி. பீரிஸை நீக்கி அவருக்குப் பதிலாக தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தை நியமிக்குமாறு சில அரசாங்க எம். பி. க்கள் பிரதமரை வலியுறுத்தி வருகின்றனர்.''

இவ்வாறு 'ஜனசக்திய' பத்திரிகையின் இம்மாத 7-ந் திகதி வெளியீட்டில்செய்திவெளியிடப்பட்டுள்ளது.

'டாக்டர் பீரிஸ் வாழ்க்கைச் செலவைக் குறைக்க தக்க நடவடிக்கை எடுக்க தகுதியற்றவர் என இச்சாரார் அபிப்பிராயப் படுகின்றனர்.

கல்வி மந்திரியாக திரு. காமினி ஜெயசூரியாவும், தேசிய மய சேவைகள் மந்திரியாக திரு. டி. பி. வெலகெதரையும் நியமிக்கப்படவேண்டும் என அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்' எனவும் அந்தச்செய்தி மேலும் தெரிவிக்கிறது.

### மலேயா தமிழாராய்ச்சி மகாநாடு
## 40 தமிழறிஞர் செல்வர்

சென்னை, நவ. 13

வருகிற ஏப்ரல் மாதம் கோலாலம்பூரில் மலேயா பல்கலைக்கழகமும், உலகத் தமிழ்ப் பேரவையும் சேர்ந்து நடத்தும் தமிழராச்சி மகாநாட்டில் கலந்து கொள்ள பல்வேறு துறைகளையும் சேர்ந்த 40 தமிழ் அறிஞர்கள் இங்கிருந்து செல்வார்கள் என அறிவிக்கப்படுகிறது.

தமிழ்இலக்கிய வாரம், தமிழ்நூல்களை இதரமொழிகளில் பெயர்த்தல் ஆகியவற்றை மகாநாடு ஆராயும் என அறியப்படுகிறது.

# 'தமிழ் வகுப்புகள் மூடப்படுவதை தடை செய்க'
## கிளிநொச்சி எம். பி.
## கொண்டுவரவிருக்கும் பிரேரணை

பம்பலப்பிட்டி, சனி

இலங்கை முழுவதுமுள்ள பாடசாலைகளில் தமிழ் வகுப்புகள் நிறுத்தப்படுவதைத் தடுப்பதற்கும் 1956-ம் வருடம் தொடக்கம் 65-ம் வருடம்வரை முந்திய அரசாங்கங்கள் தமிழரைப் பழிவாங்கும் நோக்கத்துடன் மூடிய பாடசாலைகளையும் நிறுத்தப்பட்ட தமிழ் வகுப்புகளையும் மீண்டும் ஆரம்பிப்பதற்கும் கல்வியமைச்சர் உடனடியாகக் கட்டளை பிறப்பிக்கவேண்டுமெனக் கோரும் பிரேரணையை அடுத்தவாரம் நடைபெறவிருக்கும் அரசாங்க பாராளுமன்றக் கூட்டத்தில் ஆராய்வதற்காக கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

திரு. கா. பொ. இரத்தினம் கொண்டுவரவிருக்கும் மற்றப் பிரேரணைகள் வருமாறு:

அரசாங்கம் பொறுப்பேற்ற பாடசாலை ஆசிரியர்களின் நிபந்தனை உரிமைகள் முதலியவற்றை அரசாங்க ஆசிரியர்களுக்கு உரியனபோல் ஆக்குவதற்கும் சகல ஆசிரியர்களுக்கும் பொதுவான சேவைமூப்பு அட்டவணையைத் தயாரிப்பதற்கும் எல்லா ஆசிரியர்களுக்கும் ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்களைப் போல் ஓய்வுச் சம்பள உரிமையையும் பிறஉரிமையையும் வழங்குவதற்கு கல்விமந்திரி உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் இவைபற்றி இதுவரை காலமும் நடவடிக்கை எடுக்காதது, காலந் தாழ்த்தியது வருந்தத்தக்கது.

### சட்டவிரோத இம்சை

சட்டவிரோதக் குடியேற்றக்காரரைக் கைதுசெய்தவுடன் பொலிஸார் அவர்களுக்குச் செய்யும் துன்புறுத்தல்பற்றியும் இவ்வித இம்சைகள்பற்றி அவர்கள் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகள் பற்றியும் விசாரணை செய்வதற்கு அரசாங்க பாராளுமன்றக் குழுவிலுள்ள மூன்று உறுப்பினரைக் கொண்ட ஒரு குழு நியமிக்கவேண்டும்,

## தமிழ் ஆராய்ச்சி...

(1-ம் பக்க தொடர்ச்சி)

லும், இந்தோனேஷியாவிலும், பிஜித்தீவிலும் இன்னும் அநேக நாடுகளிலும் நாம் மகாநாடு நடத்தப்போகும் மலாயாவில் கூட தமிழுக்கு குறைவில்லை. அதனுலேதான் இம் மகாநாட்டுக்கு இங்கு இவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. மலாயாப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் மகாநாட்டை ஆரம்பித்துவைக்க சம்மதித்துள்ளார். மலாயாவிலுள்ள தோட்டத்தொழிலாளர்களிலிருந்து ஆசிரியர்கள் உட்பட யாவரும் தமது ஒருநாள் சம்பளத்தை மகாநாட்டுச் செலவினங்களுக்கான நிதிக்குக் கொடுக்க முன்வந்துள்ளார்கள்.

இம்மகாநாட்டின் ஆட்சிக்குழுவுக்குத்தலைவராக இருப்பவர் மலாயா தபால்.தந்தி அமைச்சர் திரு. வி. ரி. சம்பந்தன். நிதிக்குழுவுக்கு தொழில் அமைச்சரான திரு. எம். மாணிக்கவாசகம் தலைமைதாங்குகிருர். மலாயாவிலுள்ள தமிழர்கள் அனைவரும் இம் மகாநாடு வெற்றி பெறவேண்டும்என்றும்ஆர்வத்துடனும், எழுச்சியுடனும்உழைத்து வருகின்றனர்.

மொழியுரிமை வழங்கப்பட்டால் நாட்டில் மக்களுக்கிடையில் நன்னம்பிக்கையும், சந்தோஷமும் உண்டாகும். வளர்ச்சியை விரும்பும் எந்த நாட்டுக்கும் இது முக்கியம். முக்கியமான ஓர் இனத்தின் உரிமைகளைக் கொடுப்பதும், அங்கீகரிப்பதும் இன்றைய உலகில் வரவேற்கக்கூடிய ஒன்ருகுவ.

இந்திய மொழிகளிலும், இலங்கை மொழிகளிலும் தொன்மையையும், இக்காலத்தன்மையையும்இணைத்து இயங்குவது தமிழ்மொழி. தமிழ் மக்கள் அனைவரையும் ஒற்றுமைப்படுத்துவது தமிழ்த்தாயே. நீதி நூல்களில் திருக்குறள் சிறந்தது போல், பத்தி இலக்கியங்களில் தேவாரங்கள் சிறந்தவை. அன்பு இலக்கியங்களில் சங்க இலக்கியங்கள் சிறந்தவை. தஞ்சாவூர் பெரிய கோயிலைக் கட்டி எழுப்பியபொழுது அதுவே உலகின் மாபெரும் கட்டிடமாக விளங்கியதென்றுசரித்திரங்கள் கூறுகின்றன. இத்தகைய அரிய செயல்களையும், தொண்டையும் ஆற்றி வந்த தமிழ் மக்கள் இக்காலத்திலும் வருங்காலத்திலும் தமிழ்ப்பண்பாட்டின் இலட்சியங்களைக் கடைப்பிடித்து உலகிற்கும், நாட்டிற்கும், தம்சமுதாயத்திற்கும் பெரும் நன்மைகளைச் செய்யவேண்டும்.

அடுத்த ஆண்டுநிகழ இருக்கும் மகாநாட்டிற்குஇலங்கையிலிருந்து பலர் வருதல் வேண்டும் என்றும் அவர்கள் உயர்ந்த கட்டுரைகளை மகாநாட்டிற்கு அளிக்க வேண்டும் என்றும் இம்மகாநாட்டால் தமிழ் ஆராய்ச்சியில் புதுத்திட்டங்கள் தோன்றவேண்டும் என்றும் அடிகளார் கேட்டுக்கொண்டார்.

## நூல் வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

திரு. இ. நாகராஜன் எழுதிய 'நிறை நிலா' என்னும் சிறுகதைக் கோவையின் வெளியீட்டுவிழா, வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் இன்று மாலை5 மணிக்கு திரு. இராஜ அரியரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

பிரமஸ்ரீ சி. சுப்பிரமணிய ஐயர் வரவேற்புரை நிகழ்த்துவார். இரசிகமணி கனக செந்திநாதன் வெளியீட்டுரை நிகழ்த்துவார். உடுவில் எம்.பி. திரு வி. தர்மலிங்கம், தேவன் ஆகியோருட்படப் பலர் உரைநிகழ்த்துவார்கள்.

### தமிழ்காங்கிரஸ்
## எம். பிக்களுக்கு வரவேற்பு

நெடுங்கேணி, சனி

தமிழ்காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு. மு. சிவசிதம்பரத்துக்கும், திரு. தா. சிவசிதம்பரத்துக்கும் நெடுங்கேணிப் பொது மக்களால் ஒரு பொது வரவேற்பளிக்கப்பட்டது. இரு எம். பி.க்களும் அரசடிச் சந்தியிலிருந்து ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். பல கிராமங்களிலிருந்து நூற்றுக்கணக்கானேர் இவ்வரவேற்பில் கலந்து கொண்டனர்.

## மந்திரி திருச்செல்வம் வவனியா விஜயம்

வவனியா, சனி

ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் இன்று காலை 10-30 மணிக்கு ரயில்மூலம் வவனியா வந்து சேர்ந்தார்.

வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம், வவனியா பட்டின சபைத்தலைவர் திரு எம். பொன்னையா மற்றும் பிரமுகர்களும் ரயில்நிலையத்திலிருந்து வாடிவீட்டுக்கு மந்திரியை அழைத்துச்சென்றனர். பின்னர் வவனியா நகர மண்டபத்துக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டார்.

### பிலிப்பைன்ஸ்
## மார்கோஸ் ஜனுதிபதி

மணிலா, நவ. 13

பிலிப்பைன்ஸ் ஜனுதிபதி தேர்தலில் செனட்டர் மார்கோஸ் வெற்றிபெற்றிருக்கிருர். இதுவரை முக்கால் வாசி எண்ணப்பட்ட வாக்குகளில் ஐம்பது சதவிகிதத்துக்கு மேலான வாக்குகளை அவர் பெற்றிருக்கிருர். தற்போதைய ஜனுதிபதி மகபகாலுடன் அவர் போட்டியிட்டார்.

## பல்கலைக்கழகம்

லண்டன், நவ. 13

காமன்வெல்த் பல்கலைக்கழமொன்று உருவாக்கப்படுவதனுல் இனப் பாரபட்சத்தை ஒழிக்க வழிகோலுவதாக இருக்குமென்று பிரபுக்கள் சபையில் அரசாங்க கட்சியைச் சேர்ந்த டெய்லர் பிரபு கருத்து வெளியிட்டார்.

## சிங்கப்பூரில் அஸ்திக் கிரியைகள்

கல்வி இலாகாவிலிருந்து இளைப்பாறிய சுப்பிரமணிய ஐயர், சிங்கப்பூரில் பிரதம பூசகராகவிருக்கும் சிவசுப்பிரமணிய ஐயர், கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் மனைவி ரங்கநாயகிஅம்மாள், வாஞ்சிநாதையர் மனைவி சிவகாமசுந்தரி அம்மாள் ஆகியோரின் அருமைத்தந்தையும், அகிலாண்டநாயகி அம்மாளின் அருமைக் கணவரும், கீரிமலை கதிரையாண்டவர் கோவில், வேலணை சிற்பனை முருகமூர்த்திகோவில், தெல்லிப்பழை தோதரைஅம்மன் கோவில் ஆகியவற்றில்நெடுநாள் பணிபுரிந்தவரும்வடக்கரையா என அழைக்கப்பட்டவரும்ஆனபிரமஸ்ரீ ப.ஸ்ரீநிவாசக்குருக்கள் அவர்கள்5-11-65 வெள்ளிக்கிழமைகாலைதமது இளையமகள் இல்லத்தில் சிவபதமடைந்தார். தகனம், சஞ்சயனம் ஆகியன பிரமஸ்ரீ ஆர். விஸ்வநாதையர் அவர்களால் செய்யப்பட்டு, அஸ்தி சிங்கப்பூரிலுள்ள சிவசுப்பிரமணிய ஐயருக்கு அனுப்பப்பட்டுள்ளது. தசாகம், ஏகோதிஷ்டம், சபிண்டீகரணம் ஆகிய கிரியைகள் சிங்கப்பூரில் அவரது மகனுல் செய்யப்படும். அன்னுர் காலஞ்சென்ற இல்லத்தில் நவக்கிரக சாந்தியும் பிராமணபோஜனமும் வரும் செவ்வாய்க்கிழமை (16-11-65) நடைபெறும்.

1374

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.